உ
கடவுள் துணை.
செந்தமிழ்.
தொகுதி-உகூ.] பிரமோதூதவரு தைமீ [பகுதி-ங.
Vol. XXIX. January-February 1931. No. 3.

ஸ்ரீ:

அண்டகோளவிருத்தி.

[உ0-ம் பக்கத்தொடர்ச்சி].

இனி, அப்பரம்பொருள் உயிர்களுக்குப் பலனளிக்குமாறு கூறுகிறது—'மூவழி முப்பழம் முறைமுறை தருதலின்' என்று.

தருவதாய்நிற்பது 'பெருமா' வாதலால் அதற்கேற்பப் 'பழம்' என்று சொல்லிற்றாயினும், சாதிருசியலக்ஷணையால் அது இங்குப் 'பயனை' உணர்த்திநின்றது. ஈண்டு 'முறை' என்பவற்றுள் முதலது ஆஜ்ஞாவாசகமாய்ச் சுருதிஸ்மிருதிகளை யுணர்த்துமாதலால் 'மூவழி' என்பதும் 'முப்பழம்' என்பதும் சுருதி ஸ்மிருதிகளிற் சொல்லப்பட்ட உபாயங்களையும், பலன்களையும் குறித்தன.

முறை ஆஜ்ஞாவாசகமாமென்பதை 'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன்' (திருக்குறள்-கூஅ) என்பதனாலும், சுருதி ஸ்மிருதி பகவதாஜ்ஞை என்பதை 'ஶ்ருதி ஸ்ம்ருதீ மமைவாஜ்ஞா' என்பதனாலும் அறியலாம்.

ஆகவே வழி உபாயவாசகமாதலால், சுருதி ஸ்மிருதிகளில் உபாயமாகச்சொல்லப்பட்ட கர்ம ஜ்ஞான பக்திகள் மூன்றும் 'மூவழி' எனப்பட்டன.

'முப் பழம்' என்றது அவ்வுபாயங்களாகிய கர்ம ஜ்ஞான பக்திகட்குப் பலனாகச் சொல்லப்பட்ட ஐசுவர்ய கைவல்ய பகவத்ப்ராப்திகளை உணர்த்துவதாயிற்று.

ஆகவே 'மூவழி மூப்பழம் முறைமுறை தருதலின்' என்பதற்குக் கர்ம ஜ்ஞான பக்திகளாகிய மூன்றுபாயங்களின் வாயிலாக, ஐசுவர்யம் கைவல்யம் பகவத்ப்ராப்தி என்னும் மூன்றுபலன்களையும் சுருதி ஸ்மிருதி களிற் சொல்லியபடி முறையாகத் தருமிடத்து என்பது பொருளாயிற்று.

முறையாகத்தருதலாவது: கர்மயோகநிஷ்டர்களுக்கு ஐசுவர்ய ப்ராப்தியும், ஜ்ஞானயோகநிஷ்டர்களுக்குக் கைவல்யப்ராப்தியும், பக்தி யோகநிஷ்டர்களுக்குப் பகவத்ப்ராப்தியும் பலமாகத் தருதல்.

'தரும்' என விதியாது, 'தருதலின்' என்றதனால், தருதல் ஸித்தமா யுள்ளதென்பது பெறப்பட்டது.

இதனால் நாட்டிலுள்ள பாட்டுடைப் பெருமாக்கள் பலன்தருதல் ஸித்தமில்லையென்பது குறிப்பாயிற்று.

'முறைமுறை' என்றது, முறையிற் சொல்லியமுறை என ஏழாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராய்நின்றது. முறைதருதல் — முறையானே தருதல்.

இனி, அப்பலன்களின் ப்ரகாரமிருக்கும்படி கூறத்தொடங்கிச் 'சிறப்புடைப்பொருளை முற்படக் கிளத்தல்' என்னும் மரபுபற்றி, ஒரு வரிசையில் முதலும் இறுதியுமாகிய இரண்டும் 'முன்' எனப்படுதலாற் சிறப்புடைய மோக்ஷபலன்களை முற்படுமாறு முதலிலும் இறுதியிலும் வைத்து, அவாந்தரபலமாகிய ஐசுவர்யத்தை இடையில்வைத்து முறைப்படுத்தி, முதலில் பகவத்ப்ராப்திரூபபலம் இருக்கும்படி கூறுகிறது,—'ஒன்றுண் டொண்சுவை தருவது' என்று.

ஒன்று ஒண்சுவைதருவது உண்டு எனக் கூட்டுக. 'ஒன்று' என்றது இரட்டுறமொழிதலாய் 'ஒன்று, ஒன்று' என்று நின்று, 'அம் மூன்று பலன்களில் ஒன்று ஒப்புயர்வற்றதாய்க்கொண்டு' என்னும் பொருள்பட நின்றது.

'ஒண்சுவை தருவது' என்பது 'நித்ய நிர்த்தோஷமான நிரதிசயாநந்த ரஸாநுபவத்தை அளித்துக்கொண்டு' என்றவாறு.

'உண்டு' என்றது ஸத்தாயிருக்கும் என்றவாறு.

ஒண்மை - நிர்த்தோஷம். பழத்துக்கு ஒண்மையாவது: தோடும், நாரும், சக்கையும், கொட்டையும், அற்பஸாரமும், அஸாரமும் ஆன தோஷங்கள் இல்லாமல் அக்காரக்கனியாயிருத்தல். இது 'அக்காரக்கனியே' என்ற திருவாய்மொழி (உ-கூ-அ) யில் நோக்குடையதாயிற்று.

இனி, பலத்திற்கு ஒண்மையாவது: நித்யநிர்த்தோஷமாய் (அதாவது அல்பாஸ்திரத்வாதி தோஷாஹிதமாய்) நிரதிசயமாயிருத்தல். இது, 'சுவையன் திருவின் மணாளன்' (திருவாய்மொழி க-கூ-க) 'கனியார் வீட்டின்பம்' (திருவாய்மொழி உ-ந-டு) என்பவற்றைப்பற்றநின்றது.

இனி, ஐசுவர்யரூப பலமிருக்கும்படி கூறுகிறது,—'மற்றது கல்லிலெழுந்து கடலிலழுந்தி, அறுகாற்குறவன் நீரறவிளைக்கும், நிரைபொழிற் குப்பைதருகட்டு' என்று.

மற்றது - மற்றொன்று; அதாவது: அவாந்தாபலமாய் இடைப்பட்டிருக்கும் ஐசுவர்யபலம் என்றவாறு.

'கல்லிலெழுந்து கடலிலழுந்தி' என்றது 'ஆறிடு மேடும் மடுவும்போலாம்செல்வம்' என்கிறபடியே மலைபோலுயர்ந்தும், கடல்போலிழிந்தும் உள்ள ஏற்றந் தாழ்வுடையதாகி என்றவாறு. கல் - மலை.

'அறுகாற் குறவன் நீரற விளைக்கும் நிரைபொழிற் குப்பை தருகட்டு' என்றது பெரும்பொழுதாகிய ஆறு ருதுகாலங்களையும் கால்களாகக்கொண்ட காலசக்ரரூபியான காலக்கடவுள் என்னுங் குறவன், நீரில்லாமலே பசையற்றுவிடும்படி விளைவிக்கின்ற வரிசையாயுள்ள சோலைகள்போலும் உலகின் தொகுதிதருகின்ற கட்களிப்புப்போலும் களிப்பளிப்பது என்றவாறு; அதாவது: உலகியலாகிய பொருளின்பங்களால் (இந்த்ரிய விஷயபோகங்களால்) மயக்குறுவிப்பது என்றபடி. 'எழுந்து' 'இழிந்து' என்னும் வினைபெச்சத்தொடர் 'தருகட்டு' என்பதிலுள்ள 'தருதல்' வினைகொண்டது. ஐசுவர்யத்தின் உயர்த்திக்கும் தாழ்த்திக்கும் கல்லுங் கடலும் முறையே உவமையாயின.

'அறுகாற் குறவன்' என்றதில், 'கால்' என்பது தந்த்ரோச்சாரணத்தாற் பெரும்பொழுதுகளையும், காலசக்ரத்தையும், காலக்கடவுளையும் உணர்த்திநின்றது.

'குறவன்' என்றது அக்காலக்கடவுளின் வன்கண்மைதோன்ற நின்றது. இதனை, 'மறவர் குறவர் வன்கணாளர்' என்பதனான் அறிக. காலக்கடவுளுக்கு வன்கண்மையாவது: நல்வினைபுரிந்தோர் பயன்நுக ருங்கால் அவ்வினையின் அளவின்றி, அவர் விரும்புமளவு சிறிதேனும் காலம் நீட்டித்தற்கும் ஆய்த்தற்கும் இடங்கொடாமை. இதனை,

> "தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வ
> ரீற்றிளம் பெண்டி ராற்றுப் பாலகர்
> முதியோ ரென்னு னிளையோ ரென்னான்
> கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்ப"

(சக்கரவாளக்கோட்டமுரைத்த காதை வரி 97—100)

என்னும் மணிமேகலையடிகளாலும் அறியலாம்.

நீரறவிளைத்தலாவது: வினைப்பயன்றுய்ப்பார்க்கு அப்பயன் அவர் வேட்கையினளவு இல்லாமையாலும், உள்ள அளவும் நிலைத்து நில்லா மையாலும், சிறிது நுகருமளவிற் றெவிட்டுதலாலும், துன்பமும் இடை யிடையே புகுதாலாலும் அவர் அவ் வைசுவரியத்தில் ருசியறுமாறு பயனளித்தல். நீர்மை - இனிமை. அது நீர் என நின்றது. அன்றி, ரஸபரியாயமாய் இனிமையுணாநின்றதெனினுமாம்.

கர்மபலபரிபாகத்துக்குக் காலம் காரணமாதலால் அப்பலனை விளைத்தற்கு அக் காலக்கடவுள் வினைமுதலாயிற்று.

'நிரை' — வரிசை. அதாவது பூலோக முதலாக ஒன்றன்மே லொன்றுயுள்ள உலகவரிசைகளும், அதலமுதலாக ஒன்றன்கீழொன்று யுள்ள உலகவரிசைகளுமாம்.

'பொழில்' என்றது இரட்டுறமொழிதலாற் சோலைகளையும் உலகங் களையும் உணர்த்திற்று, பொழில் உலகங்களையுணர்த்துதல் 'பொழிலேழு முண்டவெந்தாய்' (௨,௩,௪.) என்ற திருவாய்மொழியால் அறிக.

குப்பை — தொகுதி. இது, இங்கு அஸ்வாரஸ்பக்குறிப்பும் உணா நின்றது.

கட்டு — கள்ளையுடையது. இங்குக் 'கள்' என்றது இலக்கணையாற் கட்களிப்புப்போலும் களிப்புணா நின்றது. அது, அர்த்தகாமாது

பலத்தால் உண்டாகிய களிப்பு. இது, அஜ்ஞான ஜனகமாய்ப் "பிறப் புப்பிணிமூப்பிறப்பை" விளைவிப்பதென்றபடி.

இதனால் 'ஒன்றுண் டொண்சுவைதருவது' என்ற மோக்ஷ பலத்துக்கும், ஐசுவரியபலத்திற்கும் காலபரிச்சேதம் முதலியவற்றால் உள்ள வேறுபாடு காட்டப்பட்டது.

இதற்கு,

"கொள்ளும்பயனில்லைகுப்பைகிளர்த்தன்னசெல்வத்தை
வள்ளல்புகழ்ந்துநும்வாய்மையிழக்கும்புலவீர்காள்
கொள்ளக்குறைவிலன்வேண்டிற்றெல்லாந்தருங்கோதில்என்
வள்ளல்மணிவண்ணன்றன்னைக்கவிசொல்லவம்மினோ".

(திருவாய்மொழி ௩-௯-௫.)

என ஆழ்வார் புலவர்களைப் பகவத்விஷயமாகப் பாடும்படி அழைக்கும் பாசுரங்களில் நோக்கு.

இனி, நுவல்பொருட்சிறப்புக் கூறுமிடத்து, இப்பலனைச் சிறிதும் பிறர் கவரவிடாதுகாக்கும் வன்கண்மையோடுகூடிய காலக்கடவுள் நீர் வற்றவிளைவிக்கும், போகபூமி அளிக்கும் அமிர்தபானம் என்க. இது உபலக்ஷணமாதலால் அரம்பைமாதர் கூட்டம் முதலியனவும் பொரு ளாம். இப்பொருளிற் 'கள்' என்றது லக்ஷிதலக்ஷணையால் அமிர்தத்தை யுணர்த்துகிறது.

'நிரைபொழிற்குப்பை தருகட்பொன்றுவித்து' என்பதே பாட மாயின், 'கட்பு' எனப் பிரித்து அது கள் என்னும் பெயரடியாகப்பிறந்த தொழிற்பெயராய்த் தளிர்ப்பு, பூப்பு, காய்ப்பு என்பனபோலக் 'கள்ளாதல்' என்னும் பொருள்பட நிற்றதென்க.

இவ்வாறாக ஐசுவர்யம் இருக்கும்படிகூறி, மேல் எஞ்சிநின்ற கைவல்யபலம் இருக்கும்படிகூறுகிறது, 'ஒன்று வித்தறுகொட்டு' என்று.

'ஒன்று' என்றது முற்கூறிய முப்பழத்துள் எஞ்சிநின்ற கைவல்ய மாகிய மோக்ஷபலம் என்றவாறு.

'வித்தறுகொட்டு' என்றது விதையற்றகொட்டையாயிருக்கும் என்றவாறு. அதாவது: விதைத்தாலும் நாருதவித்துப் (கல்வாழைக் கொட்டை முதலாயின) போலப் பிறப்பிற்குக் காரணமில்லதாயும், கொட்டைக்காய் போலப் பாருபவமற்றதாயும் ஸத்தாமாத்திரமாயிருக் கும் ஆத்மசுகம் என்றவாறு. வித்தறுகொட்டை என்பதிற் செய்யுள் விகாரத்தால் ஈறுகெட்டு 'வித்தறுகொட்'டென நின்றது. 'வித்தருகொட்' டென்பது பாடமாயின் அருமை இன்மையுணரநின்றதென்க.

மற்றது என்று தொடங்கி வித்தறுகொட்டென்னுமளவும் ஐசுவர்ய கைவல்யங்கள் சுருதி ஸ்மிருதி விஹிதமென்றும், அவை ஸர்வாத்மநா த்யாஜ்யமில்லையென்றும், பகவத்ப்ராப்தியை நோக்கத் தாழ்ந்ததென்றும் காரணங்காட்டி நிரூபித்திருத்தலால் அவற்றைக் காற்கடைக் கொண்டது சுருதி ஸ்மிருதி விரோதமாகாதென்று குறிப்பாற் காட்டப் பட்டதாயிற்று. இதுபற்றியன்றே "பழநான்மறையின் வகையுளவாகியவாதுளவாம்" என்று சடகோபரந்தாதி பரிஹஸித்தது.

இவ்வாறாக, புருஷார்த்தங்களிருக்கும்படிகூறி, அப்புருஷார்த்தத்துள், 'ஒன்றுண் டொண்சுவை தருவது' என்று சிறப்பித்துக் கூறப்பட்ட அவ்வொண்சுவையும், அதனை அடைதற்கு வேதத்தில் உபாயமாகச்சொல்லப்பட்ட அத்யந்த ப்ரியரூபமான பக்தியும் உலகத்தார் அறியாதனவாகையாலே, அவற்றின் ஏகதேச ஸாம்யம் உள்ளதாயும், உலகத்தாரால் அறியப்பட்டதாயுமுள்ள காம புருஷார்த்தத்தில் அவ்விரண்டும் சிறிதளவு காணப்படுகையாலே காணப்பட்ட இவற்றைக் கொண்டு காணப்படாத அவற்றை நிரூபிக்கவேண்டி, நிர்த்தோஷமாகுமளவே காம வொழுக்கத்தை ஆரோபித்துப்பாடிய பேரின்பப்பாடல்கள் சிற்றின்பப்பாடல்களின் வேறுபட்டிருக்கும் விஷயவைலக்ஷண்யத்தைக் காட்டத்தொடங்கி முதலிற் பாட்டுடைத்தலைவனுடைய வைலக்ஷண்யம் காட்டுகிறது—'ஆமா விளக்கும் நாடன்' என்று.

ஆமா — அப்படிப்பட்ட மா. அதாவது: 'ஈருயிர்மருங்கின்' என்று தொடங்கித் 'தொன்மிகுபெருமா' எனனுமளவும் சொல்லப் பட்ட அந்தராத்மாவாயுள்ள பரம்பொருள். இது விளைத்தற்கு வினை முதலாய் நின்றது. இங்கு 'அம் மா' எனற்பாலது செய்யுள் விகாரத்தால் அகரச்சுட்டு நீண்டு 'ஆ மா' என நின்றது. இதனை 'ஈ

பாவம்செய்தருளாலளிப்பாரார்' (திருவாய்மொழி உ. உ. உ.) என்பத னுள் இகரச்சுட்டு நீண்டு நின்றதுபோலக்கொள்க.

'விளைக்கும்' என்றது வேண்டுவார்வேண்டும் பலன்களான மூப் போகமும் விளைவிக்கும் என்றவாறு. விளைத்தற்குச் செயப்படுபொருள் சொல்லப்படாமையால் நாட்டிற்கேற்ற செயப்படுபொருள் வருவித் துரைக்கப்பட்டது. ஸ்வபக்ஷத்தில் முப்போகங்கள் ஐசுவர்ய கை வல்ய பகவதனுபவங்கள். 'விளைக்கும்' என்னும் பெயரெச்சம், 'நாடன்' என்னும் பெயருள் நாடு என்னும் இடப்பெயர்கொண்டுமுடிய, 'ஆமா விளைக்கும் நாடு' எனப், பாட்டுடைத்தலைவனது நாட்டுவளங்கூறியவா றாயிற்று. அந்நாடு உபயவிபூதிகளுமாம்.

இனி இத்தகைய நாட்டைக்கொண்டு பாட்டுடைத்தலைவனை விசே டிக்கிறது 'ஆமாவிளைக்கும்நாடன்' என்று.

'ஆமா' என்று சுட்டியது வாசுதேவதருவாய்ப்பலப்பிரதானம் செய்யும் பரமாத்மஸ்வரூபமும், 'நாடன்' என்று சுட்டியது 'பேணுங் கால் பேணுமுரு' வாய் அனுபாவ்யமாயிருக்கும் திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்ட ரூபமும் ஆகிய தர்மபேதமுடைமையால், கூறியது கூறலன் றாயிற்று. இன்னோன்ன பொருள்வேறுபாடுடைமையால், வந்தவந் திடத்தேமிகையுளவாம்' என்பார்கூற்று மிகையாமென்பது குறிப்பா யிற்று.

'நாடன்' என்பது தந்த்ரோச்சாரணத்தால் நாடன் நாடன் என எழுவாயும் பயனிலையுமாக நின்று ஆமாவிளைக்கும் நாட்டையுடையோன் பாட்டுடைத்தலைவன் என்னும் பொருள் பயப்பதாயிற்று. பாட்டுடைத் தலைவனை 'நாடன்' என்றது ஏதுப்பெயரானென்க.

இன்னும் அது தந்த்ரோச்சாரணத்தால் நாடன் நாடன் என நின்று ஏதுப்பெயரால் நாடன்* என்ற பாட்டுடைத்தலைவனே† திணைநிலைப் பெயர்கொண்ட நாடன் என்னும் களவித்தலைமகனுமானன் என்னுங் குறிப்புணர்த்துவதாயிற்று.

---

*ஏதுப்பெயரால் நாடன் என்ற பாட்டுடைத்தலைவன்-பாடுவோர்க்குப் பலப்ர தானம் செய்யுமவன்; இவன் பிரபந்த நாயகனுவன்.

†திணைநிலைப்பெயரால் நாடன் என்ற களவித்தலைமகன் – பாட்டில் அனு பாவ்யனுகக் கருதப்படும் சிருங்காரநாயகனுவான்.

களவித்தலைமகனைப் பொருப்பன், சேர்ப்பன் என்றற் ஜெடக்கத் துப் பிற திணைநிலைப்பெயராற் கூருது நாடன் என்று முல்லைத்திணைப் பெயராற் கூறியது அவன் முல்லைநிலத்துக்குரிய திருமால் என்பது குறித்தற்கென்க.

'ஆ மா விளக்கும் நாடன்' என்ற இத்தொடரால் ஆரியத்தமிழ் வழக்கிலும் தண்டமிழ்வழக்கிலு முள்ள பாட்டுடைத்தலைவர்களின் தகுதிவேறுபாடும், களவித்தலைமக்களின் தகுதிவேறுபாடும் 'குறித் துணர்ந்துகொள்ளக் கூறியதாயிற்று.

இனி, இத்தலைமகன் சிற்றின்பத் தண்டமிழ்த்தலைமகனின் வேறு படுதற்குக் காரணமும், அவனது ஸ்வரூபரூப குணங்களும் தந்த்ரோக்தி யாற் கூறுகிறது, 'அவனே தலையிலி' என்று.

'அவனே தலையிலி' என்றது அவனொருவனே எல்லோர்க்கும் தலைவனுயும், தனக்கு மேலான தலைவனில்லாதவனுயுமிருத்தலால் என்ற வாறு. அதாவது: களவித்தலைமகனில் உயர்ந்த பாட்டுடைத்தலை மகன் பிறனெருவனுமில்லாமையால், அக்களவித்தலைமகனே பாட் டுடைத்தலைமகனுமானுன; அதனுல் ஒரு குற்றமில்லை என்றபடி.

இதனுல், சிற்றின்பப்பாடலிற் களவித் தலைமகனினின்றும் உயர்ந்த நிலையுடையோனே பாட்டுடைத்தலைவனுவன் என்ற புலனெறிவழக்கு (கவிமரபு) இத்தலைக்குப் (-பேரின்பப் பாடற்கு) பொருந்தாதென்பது குறிப்பாயிற்று. இது உபலக்ஷணத்தால், 'துறைதோறுந்தொட்டாற் பகையுளவாம்' என்பதனைப் பரிகரித்தவாருயிற்று.

ஏகாரம் தேற்றமும் பிரிநிலையும் ஒருங்குணர நின்றது.

'தலையிலி' என்பதில் 'தலை' என்பது இலக்கணையால் தலைவனை யுணர்த்திற்று. இலி - இல்லாதவன்.

இனி, இரட்டுறமொழிதலால் ஆரியத்தமிழப் பேரின்பத்தலைமக னது ஸ்வரூப வேறுபாடு கூறுகின்றது. 'தலை யிலி' என்று.

இங்கு 'தலை' யென்றது ப்ராக்ருத சரீரங்களின் ஆண்வடிவைப் புலப்படுக்கும் மீசை தாடியுடைய தலையை. அது ஆணுறுப்புக்கட்கு உபலக்ஷணம். அன்றியும், 'ஸர்வஸ்ய காத்ரஸ்ய சிர: ப்ரதானம்'

என்று தலைமைபற்றியவழக்காய்ப் ப்ராக்ருத சரீரங்களையுங் குறித்து நின்றது. இதனாற் சிற்றின்பத் தலைமகனுடைய ஆணுருப்படங்களும் குறைபடாதெழுநிக்கொண்டு மடலூர்தல் நாணுடைய பெண்மக்களுக்கு இழுக்காமென் றெண்ணி, பெண்மடல் கூறலாகாதென்ற புலனெறிவழக்கம், அவ்வுருப்புக்களொன்று மில்லாத அப்ராக்ருதமான திவ்ய மங்கள விக்ரஹ ரூபமுடைய பேரின்பத்தலைமகனுக்கு வடிவெழுதவேண்டாமலே நாணின்றிக் குணசேஷ்டிதங்கள் புலப்படப் பெண்மடல் கூறல் இழுக்கின்றி இயலுமாதலால் இங்குக் குற்றமாகாதென்பது குறிப்பாயிற்று.

இன்னும், 'தலையிலி' என்றது அவன் தனக்கொரு தலைவனை யுடையனல்லன் என்பதன் குறிப்பால் அவனே எல்லோர்க்குந் தலைவனாய்நின்று ஆளுந்தன்மையுடையான் ஆனமையால் ஆண்பாலாகத்தலைமகனென ஆரியத்தமிழர் புலனெறி வழக்கஞ்செய்தனர் என்னும் குறிப்பும் உணரநின்றது. இது 'பதிம் விஶ்வஸ்ய' 'ஸ உத்தம: புருஷ:' என்பவற்றைப் பற்றநின்றது. இதனால் சிற்றின்பத் தண்டமிழ்க்கிளவித்தலைமகன் தன்னின் மிக்கோனாகிய பாட்டுடைத்தலைவனைப் பாடற்கண்ணுடையனென்றும் இவன அத்தகையன் அல்லன் என்றும் இரு தலைத்தலைவர்களின் தகவுடைமையாலுள்ள வேறுபாடு காட்டப்பட்டது. இது 'ஆணல்லன்' என்பதில் நோக்குடையதாய் 'மற்றும் பற்றுளவாம்' என்ற காமபுருஷார்த்தத்தின் வேறுபாடுகாட்டி நின்றது.

இவ்வாறு பேரின்பத்தலைமகனின் ஸ்வரூபவேறுபாடுகாட்டி, மேல், பேரின்பத்தலைமகளின் ஸ்வரூப வேறுபாடு காட்டுகிறது 'அவன் மகள் முலையிலி' என்று.

'அவன்மகள்' என்றது "ஸ்த்ரீப்ராயமகிலம் ஜகத்" என்பதுபற்றி அப்பரம்பொருளான தலைமகனுக்குத் தலைமகளாகப் புலனெறிவழக்கம் செய்யப்பட்ட ஆத்மவஸ்து என்றவாறு. இங்கு 'அவன்மகள்' என்றது தந்த்ரோச்சாரணமாய், 'அவன்மகள் அவன்மகள்' எனநின்று உரியோனும் உரிமையுமாகிய கிழமைப்பொருளுடைமையால், அவனுக்குப் பரதந்த்ரமான ஆத்மவஸ்து அவனுக்குத்தலைமகள் எனப் புலனெறிவழக்கஞ்செய்யப்பட்டது என்னும் பொருள்குறிப்பாற்கொள்ளநின்றது.

இது, இன்னும் 'அவன்மகள் அவன்மகள்' என்றதனால் அவனுக்கு முறையான் மகளாயுள்ளாள்; அவன்மாட்டுப் பேரன்புடைமை

யாற் காதலியாயினள் என்னும் பொருள்படநின்று, பரம்பொருளுக்கும் ஆத்மவஸ்துவிற்கும் பிதா புத்ர சம்பந்தமும், பர்த்ரு பார்யா சம்பந்தமும் ஒருங்குண்டெனபதும் காட்டப்பட்டது.

இவ்வாறு 'அறியாதனவறிவித்தஅத்தா' (உ. ௩. உ.) என்ற திருவாய்மொழிப்படி தானாக ஒன்றையும் அறியமாட்டாத ஆத்மவஸ்துவிற்கு இந்த்ரியாதிகளைக்கொடுத்து உள்ளேநின்று அறிவுமூட்டுதல்பற்றி அப்பரம்பொருள் தந்தை எனப்படுதலால், பிதா புத்ரசம்பந்தமும், 'தானும் யானுமெல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்தோம்' (உ. ௩. க.) என்ற திருவாய்மொழிப்படி போகம்நுகர்தல்பற்றிப் பர்த்ரு பார்யாசம்பந்தமும் உண்டென்பது கண்டுகொள்க.

'முலையிலி' என்றது முலைபோலப் பெண்டன்மைக்குரிய ப்ராக்ருத சரீரவுறுப்புக்கள் ஒன்றுமில்லாத ஆத்மவஸ்து என்றவாறு. இதனால் ஆநுரூப்யம் கூறியவாறுமாயிற்று.

இன்னும், 'முலையிலி' என்றதனால் "முலையிரண்டுமில்லாதாள் பெண் காமுற்றற்று" (திருக்குறள் - ௯0உ.) என்று சிற்றின்பக்கூட்டத்துக்கு இகழக்கடவதாயிருக்கும் இவ்வின்மை, பேரின்பக்கூட்டத்துக்குப் புகழக்கடவதாயிருக்குமென்று தலைமகளது உருவவேறுபாடு காட்டி அக்கலவியின் இழிவு ஒழிக்கப்பட்டது.

இங்ஙனம் அத்தலைமகளின் ஸ்வரூபமிருக்கும்படி 'முலையிலி' என்று எதிர்மறைமுகத்தாற் கூறியதுணையே அமையாது, அத்தலைமகளது செயல்கள் இருக்கும்படி கூறுகிறது 'தானுமீனாள் ஈனவும்படாள்' என்று,

இதனுள், 'தான்' என்றது ஆத்மவஸ்துவான தலைமகள் என்றவாறு.

'ஈனாள்' என்றது ப்ரக்ருதிபோலப் பிறிதொன்றைத் தன்னினின்று தோற்றுவிப்பதுமன்று என்றவாறு

'ஈனவும்படாள்' என்றது விக்ருதிபோலப் பிறிதொன்றினின்றுந் தான் தோன்றியதுமன்று என்றவாறு.

இதனால் தான் ஒன்றைத் தோற்றுவித்தேனும் பிறிதொன்றில் தோன்றியேனும் நிகழும் ப்ரக்ருதி விக்ருதிகளாகிய அசித்வஸ்துக்க ளின்வேறுமாறுகாட்டி இதன்வடிவு சித்ரூபமாயும் நித்யமாயும் நிர்விகார மாயும் இருக்குமென்று சிற்றின்பத்தலைமகளினின்று வேறுபட்டிருக்கு மிருப்புக் காட்டப்பட்டது.

இதனைச் "சுவையொளியூறோசை" என்னுங் குறளுரையிற் பரிமே லழகர் சாங்கிய நூல்கொண்டு காட்டியவாற்றான் அறிக.

இதன் குறிப்பால், சிற்றின்பத் தலைமகள் அசித்ரூபமாயும் அநித்ய மாயும் இருப்பள் என்பது பெறப்பட்டது.

இன்னும், 'தானும் ஈனுள்' என்றது, சிற்றின்பத்தலைமகள்கூட்டம் மகப்பேறுபயக்கும் மெய்யுறுபுணர்ச்சியாயிருக்கும்; இஃது அன்ன தன்றி அநந்யப்ரயோஜனமாய்ச் சைதந்யகார்யமான உள்ளப்புணர்ச்சி யாயிருக்கும் என்பதும் குறித்துணாநின்றது.

இக்குறிப்புக்கு, "அமரர்க் கமுதீந்த வாயர்கொழுந்தை, அமா வழும்பத்துழாவி யென் ஆவி, அமரத் தழுவிற்று" (க. எ. கூ.) என்றும், "கலந்தென் ஆவிநலங்கொள்நாதன்" (க. அ. ௬.) என்றும், "எனதாவி தந்தொழிந்தேன்" (உ. ௩. ௪.) என்றும், "தானும் யானுமெல்லாந் தன்னுள்ளேகலந்தொழிந்தோம் தேனும் பாலும் நெய்யும் கன்னலும் முதுமொத்தே" (உ. ௩.௧) என்றும் சொல்லப்படும் திருவாய்மொழிப் பாசுரப் பொருளில் நோக்கு.

இவற்றால் இழிதகவுடைய காமபுருஷார்த்தம் பேசியதன்றென் றும், காமுகவாக்யமன்றென்றும் காட்டியவாறாயிற்று.

இனி, இத்தகையுள்ளப் புணர்ச்சிஞானனுபவமாகையால் அதனை மடல் கூறல் முதலிய அகப்பொருட்டுறைபற்றிப் பாடவேண்டியதென்? என்னும் சங்கையைப்போக்குகிறது "எழுவர் மூவர் சிறுவரைப் பயந்தனள்" என்று.

இதனுள் எழுவர் மூவர் என்றது ஏழும் மூன்றும் பத்து என் றாய், அது பக்தியையுணர்த்தும் ஒரு சங்கேதப்பெயராய் நின்றது. இதனை, 'எட்டினோ டிரண்டென்னுங் கயிற்றினால்' என்ற திருச்சந்த

விருத்தத்துள், எட்டும் இரண்டும் பத்தாய், அது பக்தியை யுணர்த்து தல்போற் கொள்க. 'பத்து என்பது பக்தியையுணர்த்துதல் 'பத்துடை யடியவர்க் கெளியவன்' என்னும் திருவாய்மொழியுட் காண்க.

'சிறுவர்' என்றது ஞானவாசகமாயிற்று. இதனை, 'செத்தத்தின் வயிற்றிற் சிறியது பிறந்தால்—எத்தைத்தின் றெங்கே கிடக்கும்?' என்ற மதுரகவியாழ்வார்வினாவின்கண், சிறியது என்றதை ஆழ்வார் தாமே ஜ்ஞானவாசகமாகக்கொண்டு விடையளித்தருளிமையாலும், சித்ஸபை என்பதில் ஞானவாசகமான சித் சப்தத்தைச் சிறுமையின் பகுதியால் மொழிபெயர்த்துச் சிற்றம்பலம் என வழங்குதலாலும் அறியக்கடவது.

பயத்தல் ஈண்டு அடைதற்பொருளுணரநின்றது.

முன் ஈனுள் என்று சொல்லிப் பின் 'எழுவர் மூவர் சிறுவரைப் பயந்தனள்' என்ற இது முரண்விளைந்தழிதல் என்னும் அலங்கார மாயிற்று.

'எழுவர் மூவர் சிறுவரைப் பயந்தனள்' என்பதில் 'எழுவர் மூவர்' என்றது பக்தியையும், 'சிறுவர் என்றது ஜ்ஞானத்தையும் பயத்தல் என்றது பெறுதலையும் உணர்த்துதலால், பக்திரூபமான ஜ்ஞானத்தை அடைந்தாள் என்பது அதன் வாக்யார்த்தமாயிற்று. இதனால், அந்த பகவத்விஷயஜ்ஞானம் அத்யந்தப்ரீதிரூபமானபக்தியாகப்பரிண மித்தமையால் அதன் அவஸ்தாபேதங்களை அகப்பொருள்துறைபற்றிக் கூறவேண்டுவதாயிற்றென்று சங்காபரிகாரம்செய்யப்பட்டதென்க.

'எழுவர் மூவர்' என்றதில், "பத்து" என்னும் பக்தியை மறைத்துப் பேசுகைக்காக ஏழு, மூன்று என்னும் எண்ணுப் பெயர்கள் கொள்ளப்பட்டன.

அதன் உயர்ச்சி தோற்றுகைக்காக உயர்திணை வாய்பாடுபற்றி எழு வர் மூவர் எனப்பட்டது. சிறுவர் என்ற உயர்திணைவாய்பாடும் அதுபற்றிவந்தது.

பக்தியை மறைத்துப்பேசும் வழக்கினை, "எட்டினோ டிரண்டெ னுங் கயிற்றினால்" என்பதனாலும், அஃறிணைப்பொருளை உயர்திணைச் சொல்லால் உயர்த்திப்பேசுகையை "நன்னெஞ்சினார்" என்பதனாலும் நாலடியார் திருக்கோவையார் என்பவற்றாலும் காண்க.

இந்தப் பக்திரூபாபந்ந ஜ்ஞானமாகிற பேரன்புடைமையால் சம்ஸ்லேஷ விஸ்லேஷதெசைகளில் அவ்வன்பின்மிகுதி புலப்படுமாறு மடற்கூற்றளவுமுள்ள அகத்திணைத்துறைகளின் வாய்பாடுகொண்டு பெண்பேச்சாகப் பேரின்பப்பாடல்கள் பாடப்பட்டனவென்பது குறிப்பாற் கொள்ளத்தக்கதாயிற்று.

இனி, 'எழுவர் மூவர் சிறுவர்' என்றது, "காட்சி முதலாச் சாக்காடீறுக்—காட்டிய பத்தும் கைவரு மெனினே—மெய்யுறு புணர்ச்சி யெய்துதற் குரித்தே" என்றபடி பகவத் வ்யாமோஹத்தால் ஜ்ஞானபரிபாகமான பக்தியின் காரியமாயுள்ள பத்துவித அவஸ்தா பேதங்களை யுணர்த்திற்றென்பதும் ஒன்று.

பத்துவித அவஸ்தைகளாவன:—காட்சி, வேட்கை, ஒருதலையுள்ளுதல், மெலிதல், ஆக்கஞ்செப்பல், நாணுவரையிறத்தல், நோக்குவவெல்லாம் அவையேபோறல், மறத்தல், மயக்கம், சாக்காடு என்பனவாம்.

இவற்றுட் சாக்காடு விரும்பிய தெய்தப்பெறுதவழிச் சாதற்குரிய நிலைமை. இப்பத்தும் ஆங்காங்குத் திருவாய்மொழியுள் வந்தவழிக் கண்டுகொள்க.

இவ்வாறு பேரின்பப்பாடல்களின் புலனெறிவழக்கை நிரூபித்துத் தோஷபரிஹாரம்பண்ணி, இதனை ப்ராஜ்ஞர்களான புலவர்கள் தெரிந்து உண்மையுணரக்கடவர்கள் என்று முடிக்கிறது. 'அவளிவ ளுவளென்றறிதல்—துவளறு காட்சிப் புலவாது கடனே" என்று.

இங்கு 'அவள்' என்றது ஆரியத்தமிழான பேரின்பப்பாடலில், தண்டமிழ்ப் புலவரால் 'துறைதோறுந் தொட்டாற்பகையுள்' என்று குற்றங்கூறற் கிலக்காகக்கருதிய புத்திஸ்தையான தலைமகளை. இது சிறப்பியல்பு புலப்படாத ஐயநிலைக்களமாய் நின்றது.

'இவள்' என்றது 'அவன் மகள்' என்று தொடங்கிச் சிறுவரைப் பயந்தனள் என்னுமளவும் சிறப்பியல்பு புலப்படநின்ற ஒருதலையுணர்வுக்கிலக்காகிய பேரின்பப்பாடற் றலைமகளை. 'என்று' என்னும் இடைச்சொல்லை ஈண்டும் கூட்டி அவள் இவளென்று அறிதல் எனக. ஈண்டு அறிதலாவது அறிந்து சாதுவெனக்கொள்ளுதல்.

'உவள்' என்றது அவ்வையநிலைக்களத்தின் மறுதலையுணர்வுக்கிலக்காகிய தண்டமிழ்ப்பாடற் றலைமகளை. அவள் உவளென்று அறிதல் எனக்கூட்டுக. அறிதல் – உண்மையான் ஒருதலைதுணிதல், அதாவது: இவள் என்றறிந்து தகும் எனக்கொள்ளுதல், உவள் என்றறிந்து தகாதெனக்கொள்ளுதல் ஆகிய இவ்விரண்டனுள் உண்மையான் ஒருதலை துணிதல் என்றபடி.

'துவளறு காட்சிப் புலவாது கடனே' என்றது ஐயந்திரிவறக் கற்ற நல்லறிவுடைய புலவாது கடமை என்றவாறு. காட்சி - அறிவு. அதற்குத் துவட்சியாவது வலியின்மை; அது ஐயமும் திரிவும் ஆம். கடன் - தாந்தாமே தமக்காகச் செய்து தீர்க்கக்கடவது.

"இனி அவளிவளுவள்' என்பதனுள் அவள் என்றது 'அவன் மகள்' என்று தொடங்கிப் 'பயந்தனள்' என்னுமளவும் சொல்லப்பட்ட இலக்கணங்களமைந்தவள் என்றும், இவள் என்றது ஸ்வபக்ஷத்துக்குரிய பேரின்பப்பாடற் றலைமகள் என்றும், உவள் என்றது இப்பேரின்பத்தலைமகளின் வேறுய்ப் பரபக்ஷத்துக்குரிய சிற்றின்பத் தலைமகள் என்றும் கொண்டு பொருள்கூறினும் அமையும்.

இனி இப்பாட்டின் நிகமனப்பொருள் வருமாறு:—ஜகத்காரணபூதனை ஸர்வேசுவரன் தன் கருணையாலே சேதனர்களைச் சிருஷ்டித்து அவர்களுக்கு அந்தராத்மாவாயிருந்து நிர்ஹேதுகமாகவே உபயவிபூத்யைசுவரியங்களையும் வேண்டுவோர் வேண்டியவாறே தானேயளிக்கும் பரமோதாரனுய் நின்று, அவரவர் அதிகாராநுகுணமாக ஸ்வரூபதர்மமாய் அநுஷ்டிக்கும்படி சுருதி ஸ்மிருதிகளில் விதிக்கப்பட்ட கர்ம ஜ்ஞான பக்திகளை அவலம்பித்து அவற்றிற்கு அநுகுணமான ஐசுவர்ய கைவல்ய பகவத்ப்ராப்திரூப பலங்களை அளிக்குமவற்றுள், பகவத்ப்ராப்திரூபபலமே சிறந்ததாயுள்ளது; அதனை அநுபவித்தற்கும் அடைதற்கும் அத்யந்த ப்ரீதிகாரித கைங்கர்யரூபமாயும் போகமாயும் உள்ள பக்தியோகாநுஷ்டானம் செய்யவேண்டுகையாலே, போகரூபமாயுள்ள அத்யந்தப்ரீதி நிரூபணம்பண்ணுகைக்கு இவ்வுலகில் நாயகநாயகி சம்பந்தம்போலே, சிறிதளவேனும் பிறிதொன்றும் காணப்படாமையாலே அதனை ஆஸ்தானம்பண்ணியநுபவிக்கும் பகவதநுபவமானது ப்ராக்ருத நாயக நாயகிகளின் லௌகிகாநுபவம்போலன்றி நிர்த்தோஷமாயும் விலக்ஷணமாயும் இருக்குமாகையால் அது அநிந்திதமாகுமென்று ப்ராஜ்ஞர்கள் அறிந்துகொள்ளவேண்டுமென்றதாயிற்று.

இவ்வாறு இதன் உரை எளியேன் அறிந்த அளவில் எழுதப்பட்டது. இதன்மேலும் தக்காரும் மிக்காருமாகிய பெரியார் ஆராய்ந்து கூறப்புகுவாராயின் ஆரியத் தமிழ்வழக்கில் அறியவேண்டிய பொருளெல்லாம் இதன்கண்ணே அமையுமாறு மிகவும் விரித்துரைத்தற்கு இடனுடைத்தாயிருக்குமென்றெண்ணுகிறேன்.

இதன்கண்ணுள்ள "குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல், கற்றறிந்தமாந்தர் கடன்".

இனி, இப்பாட்டில் அமைந்திருப்பனவாகச்சொல்லப்பட்ட நூன் மரபுகளுள் நாற்பொருட்பயன் வருமாறு :—

'மூவழிமுப்பழமுறைமுறைதருதலின்' என்பதன்கண் கர்மயோக நிஷ்டர்களுக்கு ஐசுவர்யபுருஷார்த்தம் சொல்லப்பட்டமையால், கர்மயோகாநுஷ்டானத்தால் அறமும், ஐசுவரியத்தால் பொருளும் இன்பமும் சொல்லப்பட்டன. ஜ்ஞானயோக பக்தியோக நிஷ்டர்களுக்குக் கைவல்ய பகவத் ப்ராப்திகளாகிய புருஷார்த்தம் சொல்லப்பட்டமையால் வீடுபேறு கூறப்பட்டது. ஆக நாற்பொருட்பயனும் கூறப்பட்டமை காண்க.

இனி எழுவகைமதமும் அமைந்திருக்குமாறு :—

(1) இப்பேரின்பப்பாடல்களை அகப்பொருட்டுறை வாய்பாட்டால் இறைவனையும் உயிரையும் தலைமகனும் தலைமகளுமாக நாட்டிக் கூறுதல் அகப்பொருள் வழக்கிற்கு உடன்படல் என்னும் மதம்.

(2) பெண்மடல் கூறல் ஆகும் என்பது தோன்ற, இரட்டுறமொழிதலால் 'அவனே தலையிலி' என்றதும், 'எழுவர் மூவர் சிறுவரைப் பயந்தனள்' என்றதும் குறிப்பால், பெண்மடல் கூறலாகாதென்பாரை மறுத்தலால் மறுத்தல் என்னும் மதமாயிற்று.

(3) பாட்டுடைத்தலைவன் கிளவித்தலைமகனில் உயர்ந்தவனாயிருக்கவேண்டுமென்பது பிறர்தம்மதம்; அதனைமேற்கொண்டு, மானிடப்பாடாத பேரின்பப்பாடலில் அத்தகைய தலைவன் பிறனொருவனில்லாமையால் அது கூடாதாயிற்று என்பது தோன்ற 'அவனே தலையிலி' என்று களைந்தமையால் இது பிறர்தம்மதம்மேற்கொண்டுகளைதல் என்னும் மதமாயிற்று.

(4) ஆணும் பெண்ணுமாகாத இறைவையும், உயிரையும் முறையே ஆணும் பெண்ணுமாமாறு 'அவன்' என்றும் 'மகள்' என்றும் கூறி நாட்டியது தாஅனுட்டித் தனுதுநிறுப்பு என்னும் மதமாயிற்று.

(5) கைவல்யம், பகவத்ப்ராப்தி என்னும் மோக்ஷபலம் இரண்டனுள் 'ஒன்றுண்டொண்சுவைதருவது' என்று பகவத்ப்ராப்தியைத் துணிந்தது இருவர்மாறுகோளொருதலைதுணிதல் என்னும் மதமாயிற்று.

(6) அறம் பொரு ளின்ப நூல்களுக்குரிய ஐசுவர்யபலத்தை 'அறுகாற்குறவன் நீரறவிளைக்கும் நிரைபொழிற்றுப்பை தருகட்டு' என்றதனுல் அது காலபரிச்சேதமாய் அநித்யமாய் அஜ்ஞானஜனகமாய்ப் பிறப்புக்கு ஏதுவாமென்று கூறினமையாற் பிறநூற்குற்றங்காட்டல் என்னும் மதமாயிற்று.

(7) பொருப்பன் சேர்ப்பன் என்னுது 'நாடன்' என்ற குறிப்பால், முல்லைநிலத்துக்குரிய திருமாலே தலைவன் என்பது தோன்றக் கூறியது பிறிதோடுபடாஅன் றன்மதங்கோளல் என்னும் மதமாயிற்று.

இனிப் பத்தழகும் வருமாறு:—

சுருங்கச் சொல்லல் முதலிய பத்தழகும் இப்பாட்டு முழுதும் காணலாம். 'மூவழிமுப்பழமுறை முறை தருதலின்' என்ற இவ்வோரடியுள்ளும் காணலாம்.

(1) இது சுருங்கச்சொல்லல் என்பதனை இதன் உரைவிரிவு நோக்கி யுணர்க.

(2) 'நாடன்', 'அவன்' என்பவற்றுல் 'ஒருமை' பெருமா' என்பவையும், ஒருவன் பெருமான் என விளங்கக்கூறினமையால் விளங்கவைத்தலாயிற்று.

(3) பாட்டுமுழுதும் சொல்வகையாலும் பொருள்வகையாலும் சொற்சுவை பொருட்சுவைபெறத் தொடுத்திருத்தலால் நவின்றோர்க்கினிமையுடையதாயிற்று. [செவிக்கினிய செஞ்சொல்லாற் றொடுத்தமையால், சொற்சுவையுடையதாயிற்று. வியப்பு முதலியசுவை தோன்றலாற் பொருட்சுவையுடையதாயிற்று.]

(4) இலக்கணவழுவில்லாத மொழிகள் புணர்க்கப்பட்டமையால் நன்மொழிபுணர்த்தலாயிற்று.

(5) அடிதொடையோசைவழுவாமையால் ஓசையுடையதாயிற்று.

(6) குறிப்பிற் பொருள்தோன்ற நிற்றலால் ஆழமுடையதாயிற்று.

(7) முறையின்வைப்பு இப்பாட்டுரையின் அவதாரிகைகளை நோக்கி யுணரத்தக்கது.

(8) வைதிகசமயத்தின் மாறுபடாத சான்றோர் வழக்கொடு பொருந்துதலால் உலகமலையாமையாயிற்று.

(9) ஆரியத்தமிழ்வழக்குக் குற்றமற்றதென்று காட்டினமையால் விழுமியதுபயத்தலாயிற்று.

(10) 'நித்திலத்தன்ன' என உயிரையும்' 'கல்விலெழுந்து கடலி லழுந்தி' எனச் செல்வத்தின் ஏற்றிழிவையும், 'வித்தறுகொட்டை' யெனக் கைவல்யத்தையும், 'கட்டு' எனப் பொருளின்பத்தையும் உதாரணவாய்ப்பாட்டாற் காட்டினமையால் விளங்குதாரணத்ததாயிற்று.

இனி உத்திகள் வருமாறு:—

(1) ஓத்துமுறை வைப்பு:—பாட்டுமுழுவதும்; அதிகாரமுறைமை கூறியவாற்றான் அறியத்தக்கது.

(2) தொகுத்துச் சுட்டல்:—'மூவழி முப்பழ முறை முறை தருதலின்' என உபாயங்களையும் பலன்களையும் மூன்றென் னுமெண்ணாற் றொகுத்துக்கூறல்.

(3) வகுத்துக்காட்டல்:—'முப்பழம்' என்ற தொகையை 'ஒன் றுண்டொண்சுவை தருவது' என்றும், 'மற்றது ...கட்டு' என்றும். 'ஒன்று வித்தறுகொட்டு' என்றும் வகுத்துரைத்தல்.

(4) முடிவிடங்கூறல்:— 'முறைமுறை தருதலின்' என்றதில் முறையிற் சொல்லியமுறை என அம்முறைக்கு வேதத்தை முடிவிடமாகக் கூறல்.

(5) தானெடுத்து மொழிதல்:— 'ஈருயிர்' என்று ஸ்தூலப்ராக்ருதியைச் சொல்லியதூஉம் 'மணல்' என்று உயிர்களைச்சுட்டியதூஉம் மரபின்வழிவாராது தானே எடுத்துமொழிந்தமையால் தானெடுத்து மொழிதலாயிற்று.

(6) பிறன்கோட் கூறல்:— 'தானுமீனுள் ஈனவும்படாள்' என்றது சாங்கியநூலுட் கூறியவாறு கூறினமையாற் பிறன்கோட் கூறலாயிற்று.

(7) சொற்பொருள் விரித்தல்— 'நாடன்' என்றதில் நாட்டையுடையோன் நாடன் எனச் சொற்பொருள் விரித்து, நாட்டையுடையோனை பாட்டுடைத்தலைமகன் எனக் கொள்ளப் புணர்த்தமையாற் சொற்பொருள்விரித்தலாயிற்று.

(8) தொடர்ச்சொற்புணர்த்தல்— "அண்டகோளத்தாரணுவாகி, ஆருயிர்தொகுத்து, வெண்மணற்பரப்பில் தானே நிற்கும் தன்னிலையறியாத்தொன்மிகு பெருமாவாய்த் தருதலின்" என, பலதொடராகற்பாலவாய தொடர்ச்சொற்களை ஒருதொடராகப் புணர்த்தலாற் றொடர்ச்சொற்புணர்த்தலாயிற்று.

(9) இரட்டுறமொழிதல் :— 'பூத்த', 'நாடன்', 'மகள்' என்றற்றொடக்கத்தன இருபொருளுணர்த்த மொழிந்தமையால் இரட்டுறமொழிதலாயிற்று.

(10) ஏதுவின் முடித்தல்:—'ஒன்றுண் டொண்சுவை தருவது' என்றதற்கு ஐசுவரியம் காலபரிச்சேதமுடையதாய்ப் பிறப்பிற்கேதுவாயிருத்தலும், கைவல்யம் சுவையற்றதாயிருத்தலும் ஏதுவாமாறு காட்டினமையால் ஏதுவின் முடித்தலாயிற்று. 'தலையிலி' என்றதும் அது.

(11) ஒப்பின்முடித்தல்:— 'ஒன்று வித்தறுகொட்டு' என்று கைவல்யத்தைப் பிறவாமையுடைமை யொப்புமையால் ஈண்டு உடன் கூறியது ஒப்பின் முடித்தலாயிற்று.

(12) மாட்டெறிந்தொழுகல்:—'அவன், மகள்' என்று தலைமகனும் தலைமகளுமாக அகப்பொருட் புலனெறி வழக்கினை வேண்டுமளவு மாட்டேற்றிச்சென்றது மாட்டெறிந்தொழுகலாயிற்று.

(13) எதிரது போற்றல்:—'மூவழி' என்றது பின்வரக்கடவதாய் நின்ற 'மூறை' என்பதைப் போற்றிக்கொண்டதனால் இது எதிரது போற்றலாயிற்று.

(14) முன்மொழிந்து கோடல்:—'மூவழி முப்பழம்' என்று முன்மொழிந்துகொண்டு பின்பு ஒன்றுண் டொண்சுவை தருவது', 'மற்றது கட்டு', 'ஒன்று கொட்டு' என அப்பழத்தையே கொள்ளுதலால் முன்மொழிந்துகோட லாயிற்று.

(15) பின்னது நிறுத்தல்: —'மூவழி' என்பதற்கு முன்னமே அவ்வழி இவை என்ச்சொல்லாது பின்கூறியது, பின்னதுநிறுத்த லென்னும் உத்தியாயிற்று. 'முப்பழம்' என்பதற்கும் இஃதொக்கும்.

(16) ஒருதலை துணிதல்:—மோக்ஷபலம் இரண்டனுள், 'ஒன்றுண் டொண்சுவை தருவது' எனத் தமக்கிஷ்டமுள்ளதாக ஒன்றைத் துணிந்தது ஒருதலைதுணித லாயிற்று.

(17) எடுத்துக்காட்டல்:—'கல்லிலெழுந்து கடலிலழுந்தி' என்று ஐசுவர்யத்தின் ஏற்றம் தாழ்வுகளுக்கு உதாரணங்காட்டினமையான் எடுத்துக்காட்டலாயிற்று.

(18) விகற்பத்தின் முடித்தல்:—'அவன்மகள் முலையிலி' என்று தொடங்கிப் 'பயந்தனள்' என்னுமளவும், கூற்றால் பேரின்பத் தலைமக ளியல்பும், குறிப்பாற் சிற்றின்பத் தலைமகளியல்பும் கொள்ளக்கூறி 'இவள்' 'உவள்' என்று சுட்டினமைபால் விகற்பத்தின் முடித்தலாயிற்று.

(19) முடிந்தது முடித்தல்:—கூற்றானும் குறிப்பானும் கூறி முடிந்த அத்தலைமகள் இருவரையும் 'இவள் "உவள்' என்று சுட்டியது' முடித்தது முடித்தலாயிற்று.

(20) உய்த்துணரவைத்தல்:—பெரும்பாலும் பாட்டு முழுதும் உள்ளது 'ஆருயிர்' என்றதனால் 'போகம்' என்பதும், 'தொகுத்து' என்றதனால் தனுகரணபுவனங்களுடன் என்பதும் உய்த்துணர்ந்து கூட்டிமுடிக்குமாறு புணர்த்தமையால் இவை உய்த்துணரவைத்தல் என்னும் உத்தியாயிற்று.

இனி, கவிமரபுவகை வருமாறு:—

(1) தந்த்ரோக்தி:—'அறுகாற் குறவன்' என்றதனால் தோன்றிய வன்கண்மையைப் புகழ்பொருளின் இகழ்ச்சிக்கும் புகழ்ச்சிக்கும் உரிய தாமாறு புணர்த்தது. இஃது திரட்டுறமொழிதலின் வேறுதலே அதனுரையிற் காண்க.

(2) ரஸோக்தி:—சுவையணிதோன்றக்கூறுவது. 'அவனே தலையிலி' 'அவன் மகள் முலையிலி' 'தானும் ஈனாள்' 'ஈனவும் படாள்' (வியப்பு) என்பன காண்க.

(3) சித்ரோக்தி:—'அறுகாற் குறவன்' என்று (அற்றகாலையுடைய குறவன் எனத் தோன்றுமாறு) கூறியது.

(4) கூடோக்தி:—'எழுவர் மூவர் சிறுவர்' எனக் கருதிய பொருளை மறைத்துப் பேசியது.

(5) வக்ரோக்தி:—பத்தென நேரே கூறாது ஏழும் மூன்றும் பத்தென்று கொள்ளுமாறு சுற்றுவழியாற் கொள்ளக்கூறுதல்.

(6) விஷமோக்தி:—'கல்லிலெழுந்து கடலிலழுந்தி' (அதாவது: அப்பழம் கல்லிலெறிந்தாற் பந்துபோல் எழுந்துசெல்லும், கடலிற் கற்போல் அழுந்தும்) என விபரீதப்படக்கூறியது.

(7) லோகோக்தி:—பயனடைதல் உண்டோ? இல்லையோ? என்பதற்குப் பழமோ? காயோ? என்பது லோகோக்தி. அது இங்கு 'மூவழி முப்பழம்' எனப்பட்டது. 'ஈருயிர்' (கெர்ப்பிணி) என்பதும், அது.

இன்னும் இவ்வாறே பிற தொனிகளையும் அணிகளையும் ஸ்வாபதேசப்பொருள், அந்நியாபதேசப்பொருள் முதலியவற்றையும், பிறவற்றையும் ஆங்காங்குள்ளவாறு உய்த்துணர்ந்துகொள்க. அவையெல்லாம் ஈண்டு விரிக்கிற் பெருகும்.

திரு. நாராயணையங்கார்,

பத்திராசிரியர்.

புறநானூற்றுக்குறிப்பு.

தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்

ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., Ph. D., L.T.,) அவர்கள்

எழுதுவது.

[௯0-ம் பக்கத் தொடர்ச்சி].

(4) வாள், வலந்தர மறுப்பட்டன
செவ்வானத்து வனப்புப்போன்றன
தாள், களங்கொளக் கழல்பறைந்தன
கொல்லேற்றின் மருப்புப்போன்றன
தோல், துவைத்தம்பிற் றுளைதோன்றுவ
நிலைக்கொரா அ விலக்கம்போன்றன
மாவே, யெறிபதத்தா னிடங்காட்டக்
கறுழ்பொருத செவ்வாயா
னெருத்த வவ்விய புலிபோன்றன
களிறு, கதவெறியாச் சிவந்துரா அய்
நுதிமழுங்கிய வெண்கோட்டா
னுயிருண்ணுங் கூற்றுப்போன்றன
நீயே, யலங்குளைப் பரீஇயிவுளிப்
பொலந்தேர்மிசைப் பொலிவுதோன்றி
மாக்கட னிவந்தெழுதருஞ்
செஞ்ஞாயிற்றுக் கவினைமாதோ
வனையை யாகன் மாறே
தாயி றூவாக் குழவி போல
வோவாது கூஉநின் னுடற்றியோர் நாடே.

சோழன் உருவப்பஃறே ரிளஞ்சேட்சென்னி பொற்றேரில் ஏறிக் கொண்டு காலாட்படை, குதிரைப்படை, களிற்றுப்படை இவற்றுடன் பகைவர்போர்க்களஞ்சென்று அவரை அழித்துப் போர்க்களத்திற்

பொலிவுடன் தோன்றுவதையும் அப்போது பகைநாட்டுள்ளோர் அலறுவதையுங் கண்டு அவ்வரசனை நோக்கிப் பாணர் இச்செய்யுளைப் பாடினர்.

படைகளைப்பற்றி வருணிக்கவந்த புலவர் முதலிற் காலாட்படையின் வாள், தாள், தோல் இவற்றைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றனர்:— வெற்றியைப் பெற[1] மறுப்பட்டவாட்கள் செவ்வானத்தழகையடைந்தன; போர்க்களத்தைத் தனதாக்கிக்கொள்ள அருப்புத்தொழில் பறைந்த கழலையுடைய தாள்கள் கொல்லேற்றின் கொம்பை யொத்திருந்தன; அம்பாற் றுளைக்கப்பட்ட தோற்கேடகங்கள் தன்னிலையிலிருந்து தவறாத இலக்கம்போன்றிருந்தன பின்னர்க் குதிரைப்படையையும் யானைப்படையையும்பற்றிக் கூறுவதாவது:—பகைவரையழித்த தம் பாதங்களால் தம் வலிமையைக் காட்டுவனவும் கடிவாளத்தைக் குதிரை வீரர் இழுப்பதாற் சிவந்தவாயையுடையனவுமான குதிரைகள் எருத்தை வாயிற் கவ்விக்கொண்ட புலிகளைப்போன்றிருந்தன. கோபத்துடன் பகைவர்மதிற்கதவத்தை யழித்து நுதிமழுங்கிய கொம்பையுடைய யானைகள் உயிரை உண்ணும் யமன்போன்றிருந்தன.

இவ்வாறு படைகளைப்பற்றிக் கூறிப் பின்னர் அரசன் தன் சேனைகளின் இடையில் நின்று போர்புரிந்து பின் வெற்றியுடன் பொலிந்திருக்குங்காற் கடலின்கண்ணிருந்து உதித்து மேல்வரும் செஞ்ஞாயிற்றை ஒத்திருந்தனன் என்றார்.

மறுப்பட்டன, கழல்பறைந்தன, துளைதோன்றுவ இவை மூன்றும் ஒருசொல்லாய் முறையே வாள், தாள், தோல் இவற்றைத் தழுவும். மறுப்பட்டன, துளைதோன்றுவ இரண்டனையும் உரைகாரர் இவ்வாறே கொண்டனர் என்பது 'வாளாகிய மறுப்பட்டவை யெனவும்', 'தோலாகிய துளைதோன்றுவ வெனவும் கொள்க' என்ற சொற்றொடரால் விளங்கும். கழல் பறைந்தன என்பதைமாத்திரம் ஒருமொழியாய்க்கொள்ளாது, இருமொழியாய்க்கொண்டு, பறைந்தன என்பதை வினையாலணையும்பெயராய்க்கொண்டு அது கழலைத் தழுவுமென்று கருதுகின்றனர்.

---

[1] புறநா. 6, 14-இல் தந்து என்பதில் தா என்ற தாதுவுக்கு உள்ள பொருளை ஈண்டுங்கொள்ளின், தா என்பதும் மூன்றாமடியில் உள்ள 'கொள' என்பதும் ஒருபொருட்கிளவியாகும்.

அதனானே பொருள்கூறுமிடத்துப் பறைதற்றொழிலைக் கழலதாக்கி, கழல் மருப்புப்போன்றன என்று கூறினர். செய்யுளின்போக்கை நோக்கின் கழல்பறைந்தன என்பதை மறுப்பட்டன, துளைதோன்றுவ என்பனவற்றைப்போல் ஒருமொழியாக்கி அதனைத் தாளின் செயலாகக்கொண்டு கழல்பறைந்த தாள் கொல்லேற்றின் மருப்புப்போன்றன என்று கூறலாமோவென எனக்குத்தோற்றுகின்றது. இஃது அறிஞர் ஆராயத்தக்கது.

எறிபதத்தா னிடங்காட்ட என்பதற்கு 'எதிரியை எறியும் காலமுடையான் (காலையுடையான்) இடவாய் வலவாயாகிய இடத்தைக்காட்ட' என்று பொருள்கூறினர் உரைகாரர். ஈண்டு இரண்டு ஐயங்கள் தோன்றுகின்றன:—மறுப்படுதலையும், துளைதோன்றுதலையும், கதவெறிதலையும் முறையே வாள், தோல், களிறு இவற்றின் செயலாகக்காட்டிய புலவர் இடங்காட்டுதலை மாவின் செயலாகக்கொள்ளாது குதிரைவீரனுடைய செயலாகக் கொண்டிருப்பாரா என்பது ஒன்று. பதத்தான் என்ற சொல் பதமுடையான் என்ற பொருளில் ஆண்விகுதியேற்றுச் சங்கவிலக்கியங்களில் வேறிடத்தில் வந்ததாக என் ஞாபகத்திற்கு வரவில்லை. ஆகலின் அத்தொடருக்கு 'எறி=(பகைவரை) அழிக்கின்ற, பதத்தான் =கால்களால், இடம்=(தம்) வலிமையை, காட்ட=தோற்றுவிக்க' என்று பொருள்கூறின் இடங்காட்டுதல் மாவின் தொழிலாகவே இருக்கும். சென்னியின் குதிரைகள் வலிமிக்கன என்பது 'வயமான் சென்னி' (புறநா. 266) என்ற பெருங்குன்றூர்கிழார்சொல்லால் விளங்கும். 'இடம்' என்பதற்கு வலிமை யென்ற பொருள் உண்டு என்று பிங்கலந்தைகூறினும், அப்பொருளில் அச்சொல் சங்கவிலக்கியங்களில் வழங்கியுள்ளதா என்பது ஆராய்தற்குரியது.

சிவந்து என்பதற்கு வெகுண்டு என்று பொருள்கூறுவதற்குப் பிரமாணம் 'கருப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள' (தொல். சொல். 372) என்ற சூத்திரமே.

எழுதரும் என்னுமிடத்துத் 'தருதல்' என்பது துணைவினை.

சேஞ்ஞாயிறு என்பது இனச்சுட்டில்லாப் பண்புகொள்பெயர். அக்கூற்றுச்சொற்களைச் செய்யுளில்மாத்திரம் வழங்கலாம் என்று ஆசிரியர் தொல்காப்பியனார்[1] கூறுகின்றனர்.

அணையை என்பது குறிப்புவினையாலணையும்பெயர்.

மாறு என்பது காரணப்பொருள்கொண்ட பெயராயிருந்து பின்னர் காரணத்தைக்குறிக்கும் இடைச்சொல்லாகக் கொள்ளப்பட்டது எனத் தோன்றுகின்றது.

கூஉம் என்னுமிடத்து 'உம்' என்பது செய்யும் என்ற வாய்பாட்டு வினைமுற்றிலுள்ள 'உம்' விகுதி. 'கூ' என்பது வினைமுதல்(தாது). கூ, உம் இவற்றின் இடையில் உடம்படுமெய் வாராமைக்குக் காரணம், ஆசிரியர் தொல்காப்பியனார் உடம்படுமெய் வருதலை உறழ்வதாகக்கூறினமையின்[2] என்னலாம். இவ்வாறே உடம்படுமெய் யிடாது 'பூவிரிஉம்,' 'காவிரிஇன்' 'மலர்மங்கை ஒடு' என்று வேள்விக்குடிச் சாஸனத்திற் காணப்படுதலும் கருதத்தக்கது. ஆகலின் இது அளபெடையன்று. இந்தக் 'கூஉம்' என்ற சொல் நிகழ்காலத்தைமாத்திரம் குறிக்கின்றது என்பது,

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச்
செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா. (தொல். சொல். 227)

என்ற சூத்திரத்தாற் பெறப்படும்.

களம், இலக்கம், பதம் என்பன முறையே 𑌖𑌲𑌃, 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌃, 𑌪𑌦𑌃 இவற்றின் தற்பவம்.

இச்செய்யுளில் உவமைகளின் நயம் நோக்கத்தக்கது.

பாடபேதம்:-கழல் பறிந்தன என்று வேறுபாடமுங் கூறுகின்றனர் உரைகாரர். கழல் காலைவிட்டு நீங்கியிருப்பின் பறிந்தன என்ற

---

[1] இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே. (தொல். சொல். 18.)

[2] எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே
உடம்படு மெய்யி னுருபுகொளல் வரையார். (தொல். எழுத். 141.)

பாடத்தைக் கொள்ளல்வேண்டும். அப்போது தாள் பூண்தெறித்த கொம்புக்கு உவமிக்கப்படும். கழல் காலைவிட்டு நீங்காது அருப்புத் தொழில் மழுங்கியிருப்பின் பறைந்தன என்ற பாடத்தைக்கொள்ளல் தகும். அப்போது தாள் மழுங்கிய பூணையுடைய கொம்புக்கு உவமிக்கப்படும்.

எருமை யன்ன ....
.........யானைய முன்பிற்
கானக நாடனை ......
.........இன்னொன்று மொழிவல்
....
நிரயங் கொள்பவரொடு ......
அளிதோ தானே ......

இச்செய்யுளால் அரசர் அருளும் அன்பும் இலராயின் நரகத்தை அடைவர் என்றும், தாய் குழந்தையை வளர்ப்பதுபோல் தன்னாட்டாரை அவர் காத்தல்வேண்டும் என்றும் நரிவெரூஉத்தலையார் கூறுகின்றனர்.

யானைய என்பது குறிப்புவினையாலணையும்பெயராய்க் கானகம் என்பதனைத் தழுவுகின்றது.

மொழிவல்– அல்லீற்றுத் தன்மையொருமைவினை ‘எதிர்காலம்பற்றி வரும்’ (தொல். சொல், 203, சேனா.) என்று சேனாவரையரும், ‘அல்லீறு பகர வகரம் பெற்று எதிர்காலத்து வரும். உண்பல் வருவல் என வரும். உண்ணாநிற்பலெனச் சிறுபான்மை நிகழ்காலமும் பெறும்’ (தொல். சொல். 205, நச்.) என்று நச்சினார்க்கினியரும் கூறியிருப்பினும், ‘இன்னொன்று மொழிவல்’ ‘கண்டனென் வருவல்’ (புறநா. 23, 17), ‘உவகையொடு வருவல்’ (புறநா. 165, 14) முதலிய இடங்களை நோக்குமிடத்து, அது கூறுவோன் துணிவைக்காட்டும்; (வீரசோ. கிரியா. 10, உரை.) என்று வீரசோழிய வுரைகாரர் பெருந்தேவனார் கூறுவது பொருத்தமுடைத்தெனத் தோற்றுகின்றது.

அளிதோ தானே என்னுமிடத்து, தானே என்பது 'தோற்றந் தாமே வினையொடு வருமே' (தொல், சொல். 10) என்னுமிடத்துத் 'தாமே' என்பது போன்று கட்டுரைச்சுவைபட நிற்கின்றது.

'நிரயம்' என்பது நிரயஃ என்பதன் தற்சமம். கானகம் என்பது காநநம் என்ற வடமொழியின் தற்பவம் என்பர் ஒரு சாரார். காநநம் என்ற வடமொழிச்சொல் கானகம் என்ற தமிழ்ச்சொல்லினின்றும் ஆக்கப்பட்டதென்பர் மற்றொருசாரார்.

6 வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
....
ஆனிலை யுலகத் தானு மானா
தருவும் புகழு மாகி விரிசீர்த்
தெரிகோன் ஞமன்ன் போல வொருதிறம்
பற்ற லியரோ.... ....
....
பாசவற் படப்பை யாரெயில் பலதந்து
....
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
யிறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவ ரேந்து கையெதிரே
....

இச்செய்யுளிற் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி, தன் பிரதாபமும் புகழும் மண்ணுலகத்திற்குக் கீழும், வானுலகத்திற்கு மேலும்[1], பாரதவருடத்தின் எல்லைகளைக் கடந்துஞ் செல்லுமாறு ஓமின்றி அரசியலை நடத்தல்வேண்டுமென்றும், எதிர்த்த பகைஞரை யழித்து அவரது நிலங்களையும் கோட்டைகளையும் கைப்பற்றி அவற்றைத் தன்னைத்தேடிவரும் புலவர்க்கு அளித்தல்வேண்டுமென்றும்,

[1] இச்செய்யுளிற் கூறப்பட்ட மண்ணுலகம், ஆகாசம், சுவர்க்க மென்பனவும் ருக்வேத ஸம்ஹிதையில் அடிக்கடி கூறப்படும் பூர்லோகஃ புவர்லோகஃ ஸுவர்லோகஃ என்பனவும் ஒன்றும்.

அவன்குடை சிவபிரான்கோயிலை வலம்வரும்போதன்றி மற்றவேளைகளில் தாழக்கூடாதென்றும், அவனது சென்னி தன்னைவாழ்த்துஞ் சிறந்த அந்தணர்முன்னரன்றி வேற்றிடத்தில் வணங்கக்கூடாதென்றும், அவனது கண்ணி பகைவர்நாட்டையழிக்குந் தீயாலன்றி வேறொன்றால் வாடக்கூடாதென்றும், அவனது சினம் ஊடல்கொண்டிருக்கும் மனையாளிடமன்றி வேறிடம் தணியக்கூடாதென்றும், காப்பீரியத்துடன் அவன் இருத்தல்வேண்டுமென்றும், சந்திரனிடம்போல் எல்லோரும் அவனை அணுகவிரும்புமாறு அன்புடனும், தெறுசுடர்ஞாயிற்றினிடம் போல் எல்லோரும் அவனிடம் அணுக அஞ்சுமாறு பிரதாபத்துடனும் அவன் இருந்து பூமியில் நிலைபெற்று வாழவேண்டும் என்றும் பாடினர் புலவர் காரிகிழார்.

ஆனாது என்பதற்குக் குறைவுபடாது என்பது பொருளாகும், ஹா நம என்ற சொல் ஆனம் என்றாகி, அதிலிருந்து ஆனாது என்று வந்திருத்தல்கூடும்.

புகழுமாகி—ஆகி என்பது ஆக என்ற வினையெச்சப்பொருளில் வந்து 'பற்றவிலியர்' என்ற பிறவினையோடு முடிந்தது என்னலாம்.

தந்து—பெற்றுக்கொண்டு, கைப்பற்றி என்ற பொருளில் வரும் 'தா' என்ற வினைமுதல் வடமொழியிலுள்ள 'ஆ' என்ற உபசருக்கத்துடன் கூடிய 'தா' என்ற தாதுவிலிருந்து 'ஆ' என்ற உபசருக்கம் நீங்கி' 'தா,' என்று ஆயிற்றோ எனத் தோற்றுகின்றது.

வலஞ்செய்தல் என்பது ப்ரதக்ஷிணீகரணம் என்பதன் மொழி பெயர்ப்பு. ஒருவன் தெருவிற் செல்லுகையில் அவனுக்குச் சிறந்தோர் எதிர்ப்படின், அவரைத் தன் வலக்கையின் புறத்தில் வைத்துச் செல்ல வேண்டும் என்பது ஸ்மிருதிகாரர்களின் துணிபு. ஆதலின் கோயிலில் வலஞ்செய்தல் என்றால் கோயிலிலுள்ள மூர்த்தியைத் தன் வலப்புறத்தி லிருக்குமாறு செல்லுகை என்பதே கருத்தாகும்.

நான்மறை என்பன இரண்டாம் புறப்பாட்டிற் கூறப்பட்ட நால் வேதமாகிய ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வணவேதம் ஆம்.

நிலமிசையான்—ஈண்டு மிசை என்பது இடப்பொருளைக்குறிக்கும் பெயர். 'ஆன்' என்ற மூன்றும்வேற்றுமையுருபு ஏழாம்வேற்றுமைப்பொருளில் வந்தது.

வடாஅது பனிபடு நெடுவரை என்பது ஒரு தொகைமொழி. வடாஅது என்பதும் பனிபடுநெடுவரை என்பதும் தொகையாம்போது அத்தொகையைப் பண்பொட்டு என்றார் உரைகாரர். பண்பொட்டு என்பதற்குப் பண்புத்தொகை என்பது பொருளாகும். தொகை என்ற பொருளில் ஒட்டு என்ற சொல் சேனாவரையர்காலத்துக்குமுன்னரே வழங்கப்பட்டதென்பது அவர் வழங்கும் 'பிரிவிலொட்டு' (தொல். சொல். 415, சேனா.) என்ற சொல்லால் விளங்கும்.

ஆணிலையுலகம் என்பது ஜகல்லோகஃ என்பதன் மொழிபெயர்ப்பு.

உலகம், நகர், முகம் என்பன முறையே லோகஃ, நகரஃ, முகஃ என்பனவற்றின் தற்பவம்.

இச்செய்யுளிற் சிவபிரானைப்பற்றியும், நான்மறையைப்பற்றியும் கூறியுள்ளது நோக்கத்தக்கது.

பாடபேதம்:—நான்மறைமுனிவர் என்றும் நான்மறைமுதல்வர் என்றும் இரண்டுபாடங்கள் உள. நான்மறைமுனிவர் என்பதற்கு நான்மறையைக் கற்றுணர்ந்த முனிவர் என்பது பொருளாகும். நான்மறை முதல்வர் என்பதற்கு நான்மறைகளில் முதலிற் கூறப்பட்டவர் என்பது பொருளாகும். 'மாமறைமுதல்வ' (சிலப். 11, 58) என்ற வழக்கிருத்தலால் நான்மறைமுதல்வர் என்ற பாடமும் பொருந்தும்.

7 களிறு கடைஇய தாள்

....

எல்லையு மிரவு மெண்ணாய் பகைவ
ரூர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை யாகலி னல்ல
வில்லவா குபவா லியறேர் வளவ

....

பயன்றிகழ வைப்பிற்பிற ரகன்றலை நாடே.

இச்செய்யுளிற் சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கண்டு 'நன்கு செய்யப்பட்ட தேரினுள்ள வளவ! நீ களிற்றைச் செலுத்திய தாளினையும், கழல்தழுவிய அடியினையும், அழகுமிக்க வில்லினையும், அம்பெய்த கவிந்த கையினையும், இலக்குமிகுடிகொண்ட அகன்ற மார்பினையும், யானையைப் பெயர்த்த வலியினையும் பெற்று இரவும் பகலும் பகைவரையெதிர்த்துக் கொள்ளையிடவிரும்பினை; ஆகலின் உடைப்பை மீனல் அடைக்குஞ்செழிப்பையும் புதுவருவாயையுமுடைய நின் பகைவர்நாட்டின்கண் நல்லபொருள்கள் இல்லாதுபோகக்கடவன' என்று புகழ்ந்தனர்

எண்ணாய்—எதிர்மறைப்பொருள்கொண்ட வினையாலணையும்பெயர்.

நல்ல—குறிப்புவினையாலணையும்பெயர்; 'இல்லவாகுப' என்பதற்கு எழுவாயாகும்.

நாடு என்பது 'சான்றோர் பலர்யான் வாழு மூரே' (புறநா. 191) என்றவிடத்து 'ஊர்' என்ற சொற்போல் ஏழாம்வேற்றுமையுருபு தொக்க பெயர். அவ்வாறு இறுதியில் உருபுதொக்குவழங்குதற்குக் காரணம்,

> 'ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின்
> மெய்யுருபு தொகா அ விறுதி யான' (தொல். சொல். 105)

என்ற சூத்திரமே. உரைகாரர் 'நாடு நல்ல இல்லவாகுப' எனக்கொண்டு 'இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்துமேலேறிநின்றது' என்றனர். அவ்வாறுகூறவேண்டாமெனத் தோற்றுகின்றது.

மா—வினைவேறுபடூஉம் பலபொருளொருசொல்லாகிய 'மா' என்பது ஈண்டு இலக்குமி என்ற பொருளில் வந்தது என்பது சார்பால்[1] (பிரகாணத்தால்) அறியப்படும்.

சாபம் என்பது சாபம் என்பதன் தற்சமம்.

(தொடரும்)

---

[1] ஈண்டு, அவற்றுள்

> வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்
> வேறுபடு வினையினு மினத்தினுஞ் சார்பினுந்
> தேறத் தோன்றும் பொருடெரி நிலையே (தொல் சொல் 53).

என்ற சூத்திரம் கவனித்தற்குரியது.

தொல்காப்பியர்காலத்திற் குற்றம் என்று பொருள்படுஞ் சொல் ஆனமா? மானமா?

தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்,
ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணிய சாஸ்திரி (M.A. Ph. D.L.T.) அவர்கள்
எழுதுவது.

செந்தமிழ்த்தொகுதி 26, பகுதி 11, பக்கம் 498-ல் குறித்துள்ள 'மானம் என்பதற்குக் குற்றமென்னும் பொருளுண்மை' என்ற குறிப்பைப் பார்த்தேன்.

தொல்காப்பியத்தில் மானம் அல்லது ஆனம் என்ற சொற்கொண்ட சூத்திரங்கள் எழுத்ததிகாரத்தில் ஏழு உள்ளன. அவைதாம்,

ஒன்றுமுத லாகப் பத்தூர்ந்து வரூஉ
....
ஆனிடை வரினு மான மில்லை. (தொல். உருபியல். 27)

வல்லெழுத்து மிகினு மான மில்லை. (தொல். உயிர்ம. 28)

வல்லெழுத்து மிகினு மான மில்லை
யொல்வழி யறிதல் வழக்கத் தான. (தொல். உயிர்ம. 44)

ஆடூஉ மகடூஉ வாயிரு பெயர்க்கு
மின்னிடை வரினு மான மில்லை. (தொல். உயிர்ம. 69)

மெல்லெழுத்து மிகினு மான மில்லை. (தொல். புள்ளிம. 28)

மெல்லெழுத்து மிகினு மான மில்லை. (தொல். புள்ளிம. 46)

முதனிலை நீடினு மான மில்லை. (தொல். குற்றி. 60)

சொல்லதிகாரத்தில் 'வினையுருபு மன்ன மரபின—மான* மிலவே சொன்முறை யான' என்ற ஒரே சூத்திரம் மானம் என்னுஞ் சொற் கொண்டது. பொருளதிகாரத்தில் அச்சொற்கொண்ட சூத்திரம் ஒன்று மிருப்பதாகத் தெரியவில்லை.

குற்றமென்ற பொருளில் மானம என்ற சொல் சங்க விலக்கியங்களில் வழங்கியுள்ளதாகத் தோன்றவில்லை. பெருங்கதையில் 'மான மில்லை மற்றவன் மாட்டெனா' (உஞ்சைக். 42, 235) என்னுமிடத்து அப்

---

*இச் சூத்திரக்குறிப்பில் மானம் என்பதற்குப் பிரதியாக வானம் என்று ஏட்டில் இருந்திருக்கலாம் என்று கூறப்பட்டது.

பொருளில் மானம் என்ற சொல் காணப்படுகின்றது. சேந்தன் திவாகரம், சூடாமணி இந்நிகண்டுகளினும் அஃது அவ்வாறு காணப்படுகின்றது. ஆதலால் பெருங்கதைக்குமுன்னரே மோனையில் மிக்க பயிற்சியுள்ளோர் மேற்கூறியதொல்காப்பியச்சூத்திரங்களிற் சந்தியை மானம் என்று பிரித்து அதற்குக் குற்றம் என்று பொருள்கொண்டிருத்தல்வேண்டும்.

மூற்கூறிய எழுசூத்திரங்களுள் 'வல்லெழுத்து மிகினு மானமில்லை' என்ற இரண்டு சூத்திரங்களைத் தவிர மற்றவைகளில் மோனையில்லாததாலும், சங்ககாலத்தில் மோனையோடு செய்யுள் அமைத்த வழக்கு மிகுதியாயின்மையானும் ஆசிரியர் தொல்காப்பியனார் மோனையை அதிகமாய்க் கவனிக்கவில்லை யென்பது நிச்சயம்.

வடமொழியிலக்கணம் நன்கு உணர்ந்த ஆசிரியர் 'அவ்வாறு சொல்வதில் ஒன்றும் மானம் (பிரமாணம்) இல்லை, இவ்வாறு சொல்வதில் யாதுஹாநம் (குற்றம்)' என்று புலவர்கள் அடிக்கடி வழங்குவதை யறியாது குற்றம் என்றபொருளில் மானம்என்ற சொல்லை வழங்கியிருக்கமாட்டார்.

அவ்வாறு சந்தியைத் தவறாகப் பிரித்து வழங்குஞ் சொற்கள் பல; அவற்றிற் சிலவற்றைமாத்திரம் இங்குக்காட்டுகின்றேன்

'அவ்வில்வலவாதாபிகள்' போன்ற தொடரைத் தவறாகப் பிரித்து 'வில்வல னெனவோதும் வெய்யவ னவ்வெல்லை' (கந்தபுராணம் வில்வலன்........படலம், 27) என்றவிடத்து வில்வலன் என்ற பிரயோகம் கந்தபுராணத்தில் வழங்கியுள்ளது. பிங்கலந்தையில் ஆபச்சைவன் என்பதற்கு அஷ்டவசுக்களில் ஒருவன் என்று பொருள் கொடுக்கப்பட்டுளது. ஆபச்சைவன் என்று பெயருள்ள வஸு வடமொழியிற் காணோம். ஆுவஃ (ஆப:) என்று ஒரு வஸுவின் பெயர். சுலோகத்தில் ஆுவஶ்வ என்பதைப்பார்த்து, அஃது ஆுவஃ, ச, ஏவ என்ற மூன்று மொழியாலான தொடர் என்பதையறியாது, ஒரு சொல்லாகக்கொண்டு அவ்வாறு எழுதியிருக்கவேண்டும். விசித்ரஶிகண்டிஜஃ (சித்திரசிகண்டிசன்) என்பது வடமொழியில் ஒரே சொல். அதற்கு வியாழன் என்று பொருள். இதனை இரண்டுசொல்லெனக் கருதிப் பிங்கலந்தையில் சித்தன், சிகண்டிசன் என இரண்டும் வியாழனுக்குப் பெயராகக் கொடுத்துள்ளன. சூடாமணியிலும் சிகண்டிசன் என்பது வியாழனுக்குப் பெயராகக்கொடுத்துள்ளது. ஜாதிஜஃ, நிஷ்க்ருஷ்டிஃ என்ற இரு சொல்லாலாகிய ஜாதிஜநிஷ்க்ருஷ்டி என்னுந்தொகைமொழியை ஜாதி: ஜநிஷ்க்ருஷ்டிஃ என்ற இருசொல்லாலாகியது என்றுகருதி, சங்கத்தகாதி

யிற் சாதி என்பதற்கு சாதிக்காய் பொருளென்றும், சநிட்குடி என்பதற்கு ஏலம் பொருள் என்றும் கூறியுள்ளது. இவ்வாறு நிகண்டுக்காரர் முதலியோர் தவறி யெழுதிய சொற்கள் பின்னர் ஆராயப்படும்.

இவ்வாறு சிலர் சொற்களின் உண்மையுருவந்தெரியாது அவற்றை மாற்றியதைப் பல பாஷைகளிலுங் காணலாம். வடமொழியினின்றும், ஆங்கிலத்தினின்றும் சில உதாரணங்கள் இங்குக் காட்டுகிறேன்.

இருக்குவேதம் முதல் மண்டலத்தில் 'அஸுர:' (அசுர:) என்னுஞ்சொல் 'தேவன்' என்ற பொருளில் வழங்கப்பட்டுள்ளது. அச்சொல்லுக்கு ஸாயணாசாரியர் 'உயிர் கொடுப்போன்' என்று பொருள் கொடுத்துள்ளார். இருக்குவேதம் போலப் பழமையான பாரஸீகத்து 'ஸெண்ட் அவஸ்தா' என்னும் நூலில் இதே சொல் 'அஹுர:' (அஹுர:) என்ற ரூபத்தோடு 'தேவன்' என்ற பொருளிலேயே வழங்குகின்றது. பின்னர் யாரோ வொருவர் 'அஸுர:' (அஸுர:) என்னுஞ்சொல்லின் முதலெழுத்தாகிய 'அ' என்பது எதிர்மறைப்பொருளில் வந்திருக்குமென்றெண்ணி 'ஸுர:' என்ற ஒருசொல்லைப் படைத்து அதற்கு தேவன் என்று கொண்டதே பின்னர் வழக்கில் வந்துவிட்டது என்று மொழிநூல்வல்லோர்களின் கொள்கை.

ஆங்கிலத்தில் an ewt என்ற இருசொற்களை ஒருவன் உச்சரிக்கும்போது அவற்றின் உண்மையுருவந்தெரியாத மற்றொருவன் a newt என்று அறிந்துகொண்டு அவ்வாறே வழங்க, இப்போது 'ewt' (யூட்) என்னுஞ் சொல் 'newt' (ந்யூட்) என்ற ரூபத்திலேயே வழங்குகின்றது. A norange என்ற சொற்கள் An orange என்று மாறி வழங்கப்பட்டதால், இப்போது 'norange' (நாரங்க்) என்னும் பழமையானசொல் 'orange' (ஆரஞ்ச்) என்று வழங்குகின்றது. இவ்வாறு வழங்குகின்ற சொற்கள் பல. அவற்றை இங்கு விரிப்பின் மிகும். இவ்வாறு சொற்கள் பண்டையுரு மாறிப் புத்துருவோடு வழங்கும் முறையை எஸ்பர்ஸன் (Jespersen) என்ற மேல்காட்டு மொழிநூல் வல்லோர் metanalysis (மெடனலிஸிஸ்) என்ற சொல்லால் அவர்நூலில் வழங்குகின்றனர்.

ஆதலால் ஆசிரியர் தொல்காப்பியர் குற்றமென்றபொருளில் 'ஆனம்' என்ற சொல்லையே வழங்கியிருப்பாரென்பதும், சந்தியிலுள்ள அச்சொல்லை மானம் என்று பிரித்துக் குற்றமென்ற பொருளில் வழங்கிவிட்டனர் என்பதும் எனது துணிபு.

உ

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௨அ-ம் தொகுதியின் ௬௯௨-ம் பக்கத்தொடர்ச்சி].

அரக்கராசன் அகிருத்தியஞ்செய்ததற்குக் குரக்குராசனைக் கொல்லல் முறையோ வெனல்.

464 "அரக்கர்ஓர் அழிவு செய்து கழிவரேல், அதற்கு மாறோர்
குரக்கர சதனைக் கொல்ல மனுநெறி கூறிற் றுண்டோ!
இரக்கம்எங் குகுத்தாய்! என்பால் எப்பிழை கண்டாய் அப்பா!
புரக்கழி விதுநீ பூண்டாற் புகழையார் பரிக்கற் பாலார்!"

இ - ள். "அரக்கர் (அரசன்) ஓர் அகிருத்தியத்தைச்செய்து (அகப் படாமல் தப்பிப்) போய்விட்டால், (அவனைக் கண்டுபிடித்துத் தண்டிப் பதை விட்டு) அதற்கு மாறாக (அகப்பட்ட) குரங்குராசனைக் கொல்லும் படி மனு (தர்மசாஸ்திர) முறை கூறியிருக்கிறதோ! (உனக்கு இயல்பாக உள்ள) இரக்கத்தை எங்கே கவிழ்த்துவிட்டாய்! (என்னைக் கொல்லு தற்கு) என்னிடத்தில் என்னகுற்றத்தைக் கண்டாய்! (அரசர்க்குரிய காத்தற்றொழிலுக்கு எதிரிடையாக என்னைக்கொன்று) காத்தலை அழித்தலான இச்செயலை நீ மேற்கொண்டாயானால், (காத்தற்றொழிலா லுண்டாம்) புகழைப்பூண்பார் (வேறு) யார் (இருக்கின்றார்)!"

அழிவு - அகிருத்தியம்: அழிம்பு என உலகில் வழங்குவது. அரக்கர் ஓர் அழிவுசெய்து என்றது இராவணன் சீதையைக் கவர்ந்த தைக் குறித்தது. கூறிற்று - கூறினது. உகுத்தல் - சிந்தல். புரக் கழிவு என்பதில் புர என்பதை (ப் புரத்தல் அதாவது காத்தல் என்று பொருள்படும்) முதனிலைத் தொழிற்பெயராகக்கொண்டு, புரக்கு அழிவு எனப் பிரித்துத் புரத்த (ற் றொழி) லுக்கு அழிவு எனக்கொண்டு பொருள் கூறப்பட்டது. புரத்தல்வல்லனென்னும் பொருளுடைய புரவ லன் என்பதில் புர முதனிலைத்தொழிற்பெயராயிருத்தல் காண்க. அறக் கழிவு (- உலகவழக்கத்திற்குப் பொருத்தமில்லாமை. தொல். பொ. 218, தமிழகராதி) என்பதில், அறம் உலகவழக்கத்தொடு பொருந்த

மூடைமை எனக்கொண்டு அறத்தின் கழிவு (- அழிவு தமிழகராதி) அறக்கழிவு என வழங்கலாயின தெனலாம். அதுபோலப் புரக் (குத லின்) கழிவு (- அழிவு) புரக்கழிவு எனப்பட்டதெனலுமாம். அறத்துக்கு மாறான பாவம் அறக்கடையெனப்படுவதுபோலப் புர (த்தலு) க்கு மாறான அழித்தல் புரக்கழிவெனப்பட்ட தெனலுமாம். பரித்தல் — தரித்தல். குரங்கு அரசு, குரக்கரசு என வலித்தல்விகாரமுற்றது.

'அதற்கு வேறோர்,' 'குரக்கினத்தரசை,' 'பரக்கழி,' 'புரக்கழி' என்பனவும் பாடங்கள். புரக்கழிவு என்ற பாடம் திரிசிரபுரம் வி. கோவிந்தபிள்ளை (இரக்தாக்ஷிவருஷப்) பதிப்பிற் கண்டது.

உனக்கு இயல்பான இரக்கம் நீங்காதிருந்தாயானல், நிரபராதியான என்னைக் கொன்றிராயென்பான், 'இரக்கமெங்குகுத்தாய்' என்றான்.

ஐயோ! புகழெனப்பட்டவையனைத்தையும் பூண்டிருந்த நீ இந்த அநியாயக்கொலைசெய்து அபகீர்த்திக்காளாய்விட்டாயே! இனிப் புக ழைப் பூணத்தக்கா ரெவருமில்லையே! என் றிரங்குவானாய் 'புரக்கழி விதுநீ பூண்டாற் புகழையார் பரிக்கற் பாலார்!' என்றான்.

முன் 'திகைத்தனை போலும் செய்கை' என்று குறிப்பாகக் கூறி யதை வெளிப்படையாகக் கூறுவானாய் மனைவியை வௌவினவனை மாய்க் கும் கிரமமானசெயலைச் செய்யாமல் விட்டு, அதற்கு மாறாக, அக்கிரம மாகக் குற்றஞ்செய்யாதவனைக் கொன்றாயென்றான்.

விதிவிலக்குகள் மேலியவர்க்குமட்டுமோ?
எளியவரை வலியவர் வருத்தினலும்
இசையன்றி வசையுண்டோ? எனல்.

465 "ஒலிகட லுலகந் தன்னில் ஊர்தரு குரங்கின் மாடே
கலியது காலம் வந்து கலந்ததோ? கருணை வள்ளால்!
மெலியவர் பால தேயோ, ஒழுக்கமும் விழுப்பந் தானும்?
வலியவர் மெலிவு செய்தால், புகழன்றி வசையும் உண்டோ?"

இ - ள். "உலகத்திலே (இப்போது நிகழ்வது தீமை நிகழாத திரேதயுகம். அப்படிப்பட்ட யுகத்தில் இப்படிப்பட்ட குரங்குக்கொலை நிகழ்ந்ததனல்) கலிகாலம் குரங்குகளுக்குமட்டும் வந்ததோ? நல் லொழுக்கமும் (அதனல் உண்டாம்) சிறப்பும் எளியவரிடத்துமட்டும்

இருக்கவேண்டியனவோ? வலியவர் (எளியவரை) மெலிவு (உறும்படி வருத்தஞ்) செய்தால், (அதனால் அவர்க்குப்) புகழ் (உண்டாவது) அன்றிப் பழி (உண்டாவதும்) உண்டோ."

ஒலி கடல் உலகம் - ஒலிக்கின்ற கடல் (சூழ்ந்த) பூமி. ஊர்தல்—ஏறுதல் (பெரும்பாணாற்றுப்படை). ஊர்தி - ஏறப்படுவது (சிந்தாமணி). ஊர்தரு குரங்கு - (மரம்) ஏறும் குரங்கு. அம்பு எய்தல் காண்டும் என்னுது 'எய்தல் காண்டும்' (மராமரப்படலம்) என்றதுபோல மரம் ஊர்தரு (- மரமேறும்) குரங்கென்னுது 'ஊர்தரு குரங்கு' எனப்பட்டது. 'ஊர்தரு குரங்கு' என்பதற்கு 'ஓடித்திரிகின்ற குரங்கு' என்பது மூந்திய உரை. தரு, துணைவினை. மாடு, ஏழனுருபு. அது, ஆறனுருபு: கலியது காலம் - கலிபுருடனுடைய காலம் - கலியுகம். வள்ளல் - (தன்னிடம் வந்த யாசகர் எவரையும்) வரையாது (- விலக்காமல்) கொடுப்போன் வள்ளல் விளிவேற்றுமையில் வள்ளால் என ஈற்றயல் நீண்டது. கருணை வள்ளால் - கிருபையுடைய கொடையாளனே. "மெலியவர் - அறிவு ஆண்மை ஆற்றல் என்றவற்றிற் குறைபாடுடையவர். அவற்றில் மிக்கவர், வலியவர்". ஒழுக்கம் நல்லொழுக்கத்தைக் குறித்தது. விழுப்பம் இங்கே ஒழுக்கத்தாலுண்டாம் சிறப்பைக்குறித்தது. 'ஒழுக்கம் விழுப்பம் தரலால்' எனக் குறளில் வருதல் காண்க. மெலிவு ஆகுபெயராய் மெலிவுறுதற்குக் காரணமான வருத்தத்தைக் குறித்தது. மெலிவு - இழிதொழிலென்றது மூந்திய உரை.

'உறைதரு குரங்கு,' 'வந்து கலந்ததோ,' 'வலியவர் பிழையைச்' என்பனவும் பாடங்கள்.

வாலி, தன்னை அக்கிரமமாகக்கொன்ற இராமன் 'வாலியை வென்ற சூரன்' எனப் புகழப்படுவானன்றி இகழப்படானென்பதைக் கோபத்தோடும் வருத்தத்தோடும் மனத்துட்கொண்டு 'வலியவர் மெலிவுசெய்தாற் புகழன்றி வசையும் உண்டோ?' என்றான். இக்கருத்து நன்கு விளங்க அவன் இதன்பின் 'அறைகழல் அலங்கல் வீர ராயவர் புரிவதாண்மைத் துறையென லாயிற் றன்றே' என்பதைக் காண்க.

இவ் விருவாக்கியக் கருத்துக்களோடு இதன்முன் கூறப்பட்ட 'தீமைதான் பிறரைக் காத்துத் தான்செய்தாற் றீங்கன்றாமே?' என்ற

வாக்கியக்கருத்து, தீமை நன்மைபாகத் தவறுபடப் பாவிக்கப்படுந்தன்மையில் ஒப்புநோக்குதற் குரியது. இம்மூன்றுவாக்கியங்களும், வலியவரது நற்செயல்களையேயன்றித் தீச்செயல்களையும் பகுத்தறிவில்லாத உலகம் பாராட்டுகிறதேயென்று வாலி மனம் எரிந்து வருந்தி மொழிந்தனவாய், இராமனை "வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்—தான் அறி குற்றப் படின்" என்ற குறட்கருத்துப்படி வருத்தமுறுத்தக் குறித்தனவா யுள்ளன.

நாட்டிலே உன் அரசை உன்தம்பிக்குக் கோடுத்தாய்;
காட்டிலே என் அரசை என்தம்பிக்குக் கோடுத்தாய்;
இச்செயல்களினும் புதுமையானவை யாவையெனல்.

466 "கூட்டொரு வரையும் வேண்டாக் கொற்றவ! பெற்ற தாதை
பூட்டிய செல்வம் ஆங்கே தம்பிக்குக் கொடுத்துப் போந்து
நாட்டொரு கருமம் செய்தாய்! எம்பிக்கிவ் அரசை நல்கிக்
காட்டொருகருமம்செய்தாய்! கருமந்தான் இதன்மேலுண்டோ!"

இ-ள். "(ஏ!) அசகாயசூர! (உன்னைப்) பெற்ற பிதா (வான தசரத சக்கரவர்த்தி உனக்கு) உரியதாக்கிய (அரசுச்) செல்வத்தை (உன் தம்பி (பரதனு) க்குக் கொடுத்து (விட்டுக் காட்டுக்கு) வந்ததனால், நாட்டிலே ஒரு (புதுமையான) காரியத்தைச்செய்தாய்! என் தம்பி (சுக்கிரீவனு) க்கு இந்த (எனது) அரசு (ச்செல்வத்தைக்) கொடுத்ததனால், காட்டிலே ஒரு (புதுமையான) காரியத்தைச் செய்தாய்! (புதுமைமிக்க) இப்படிப்பட்ட செயலினும் மேலான (புதுமையுடைய) செய லுண்டோ!"

கொற்றம் வெற்றியன்றிப் பலத்தையும் குறிக்கும்: இங்கே பலத்தைக் குறித்ததாகக்கொள்ளல் பொருத்தமானது. 'வேறொருவரது சகாயமில்லாமல் பகைவரை வெல்லும் பலமுள்ளவன்' என்ற பொருளுடைய அசகாயசூரன் என்ற வடமொழித்தொடர்க்கு, 'கூட்டொருவரையும் வேண்டாக்கொற்றவன்' என்ற மொழிபெயர்ப்பு நெஞ்சுள் நெடிது நின்று நிரம்பவும் மகிழ்வூட்டும் நீர்மையதாயிருத்தல் காண்க. ஆங்கே—அப்பொழுதே அல்லது அந்த இடத்திலேயே. போந்து - வந்து. கருமம் - செயல்.

பெரும்படைகளோடு தன்னை எதிர்த்த கரதூடணதியரை இராமன் எவரொருவர் துணையுமில்லாமல் தன்னந்தனியனாய்நின்று

பொருது கொன்று வென்ற போர்த்திறத்தை நினைந்து, 'கூட்டொரு வரையும் வேண்டாக்கொற்றவ!' என்றான்.

நாட்டிலேயன்றிக் காட்டிலேயும் வான்முறைக்கு மாறாகத் தமயனரசைத் தம்பிக்குக் கொடுக்கும் புதுமையானசெயல்கள் புரிந்தாய்! அச்செயல்களால், நாட்டிலே, வேண்டுமென்றன்றி ஓர் அரசனையும் காட்டிலே வேண்டுமென்றே ஓரரசனையும் உயிரொழியச்செய்தாய்! இப்படிப்பட்ட அபூர்வமும் அநியாயமுமான செயல்களினும் அதிகமான செயல் யாதிருக்கின்றது! என்று இராமனை நோக்கி வாலி பரிகாசமும் பரிதாபமும் ஒருங்கு புலப்பட உரைத்தானென்பது கருத்து.

நாட்டிலே தன்னலங்கருதாது, தியாகமூர்த்தியாய், எல்லாச்செல்வங்களையுந் தன்னுட்கொண்ட அரசப்பெருஞ்செல்வமனைத்தையும் தம்பிக்குக் கொடுத்துப் பரம பரித்தியாகபரனெனப் பார்முழுதும் பாவிய மிகவுயர்ந்த புகழ்பெற்ற நீயே, காட்டிலே இராவணனைவெல்லச் சுக்கிரீவன் துணையைவேண்டிச் சுயகாரியதுரந்தரனாய், உன்னை எதிராத நிரபராதியான என்னை மறைந்துநின்று கொல்லும் மாபாதகத்தைச் செய்து மிக இழிந்த வெம்பழியுற்றாய்! அச்செயலினுஞ் சிறந்ததுமில்லை. இச்செயலினும் இழிந்ததுமில்லை. இப்படி ஒன்றற்கொன்றெதிரிடையான செயல்கள் செய்தலில் உனக்கு மேற்பட்டவர் யார் இருக்கின்றனரென்று விரித்துப் பொருள்கூற இக்கவி இடந்தருகின்றது.

வீரர் எதுசெய்யினும் வீரமென்றாய்விடுகின்றதே!
இப்படி என்னை வஞ்சித்த நீ
எப்படி இராவணனைக் கோபிக்கலாமெனல்.

467 "அறைகழல் அலங்கல் வீ ராயவர் புரிவ தாண்மைத்
துறையென லாயிற் றன்றே! தொன்மையின் நன்னூற் கெல்லாம்
இறைவ, நீ என்னைச் செய்த தீதெனில், இலங்கை வேந்தன்
முறையல செய்தா னென்று முனிதியோ? முனிவி லாதாய்."

இ - ள். "('கருடி கற்றவன் இடறிவிழுந்தால் அதுவும் ஒரு வித்தை' என்பதுபோல) வீரர்செய்வது (பேடிச்செயலானாலும்) வீரமென(ப் பகுத்தறிவில்லாத உலகத்தாரால் சொல்லப்பட) லாய்விட்டதே. (பேடித்தனமாக என்னை மறைந்து கொன்ற உன்னை 'வாலியை வென்ற

வீரன்' என்று உலகத்தார் சொல்வார்க ளென்றவாறு.) பழைய நீதி நூல்களுக்கெல்லாம் (போதனா) குரு (என்னுமாறு அவைகளை நன்கு கற்று வல்லவன்) ஆனவனே! நீ என் திறத்திற் செய்தது இது—இப்படி வஞ்சகமாக மறைந்து கொலைசெய்தது—என்றால் (நீ அறியாமல், உன்மனைவியைக் கவர்ந்த) இராவணன் அக்கிரமஞ்செய்தானென்று கோபிக்கக் கடவையோ?"

அறை கழல்—ஒலிக்கின்ற வீரகண்டை. அலங்கல்—(வெற்றி) மாலை. துறை—ஒழுங்கு—முறை. ஆண்மைத்துறை—வீரர்முறை; வீரச்செயலையுணர்த்திநின்றது. அன்றே—அல்லவா: அன்று ஏ அசைக ளெனலுமாம். தொன்மை—பழமை. 'நன்னெறி' 'நல்வழி' என்பவை நீதிநெறி நீதிவழி எனப் பொருள்படல்போல, 'நன்னூல்', நீதிநூல் (—நீதிசாஸ்திரம்) எனப் பொருள்படநின்றது. இறைவன்—குரு. தலைவ னென்பது முந்திய உரை. முறை—கிரமம். முறை அல என்பதில் அல என்பதை அல்லது என்பது லகர ஒற்றும் தகர உகரமும் தொக்கு வந்ததாகக் கொண்டு பொருள் கூறப்பட்டது. திருவவதாரப்படலம் ௧௩-ம் பாட்டில் வருவது வருவ எனப்பட்டதுபோல, இங்கே அலது அல எனப்பட்டது. முறை அல என்பதற்கு நீதியல்லாத காரியங்கள் என்பது முந்திய உரை. முனிதல்—கோபித்தல். முனிவு இலாதாய் என்பது, நீ, கொலை களவு கள் காமம் பொய் என்னும் பஞ்சமாபாதகங்க ளுள் முதலாவதான கொலைப்பாவஞ் செய்தவனாதலால், நான்காவதான காமசம்பந்தமான பாவஞ்செய்த இராவணனைக் கோபிக்கத் தகுதியில்லா தாய் என்ற பொருள் குறித்துநின்றது. '(இயல்பிற்) கோப மில்லாதவனே' என்பது முந்திய உரை.

இராமன் தன் பெருங்குற்றத்தையுணரானாய் இராவணனது சிறு குற்றத்தைப் பெரிதாகப் பாராட்டுவதாக வாலி கூறியது, 'தன்கண்ணில் உத்திரங்கிடப்பதை யறியாமல் பிறன்கண்ணில் துரும்பு இருப்பதைச் சுட்டிக்காட்டல்போல' என்னும் ஆங்கிலப்பழமொழியை நினைவுகூரச் செய்கின்றது.

அகாரணமாக வாரபட்சஞ்செய்தாயெனல்.

["உன் திறத்தில் ஒரு தன்மையரான இருசகோதாரேங்களுள் ஒருவன்மேல் அன்பு செலுத்தி ஒருவன்மேல் அம்புசெலுத்தல் தருமமோ? வீரமோ? உன்பூமிக்கு என் தேகம் பாரமோ? எதுகருதி இது செய்தாய்?"]

வலிய யான் இருக்க, எளிய என்தம்பியைத் துணைக்கொண்டது, சிங்கத்தைவிட்டு முயலைத் துணைக்கொண்டதுபோலு மெனல்.

468 "செயலைச் செற்ற பகைதெறு வான்தெரிந்
தயலைப் பற்றித் துணைஅமைந் தாயெனில்,
புயலைப் பற்றும்அப் பொங்கரி போக்கி ஓர்
முயலைப் பற்றுவ தென்ன முயற்சியே!"

இ-ள். "(நீயும் இலக்குமணனும் சீதையைக் காத்திருந்த) காவலை (மாயமானால்) அழித்த (எனவே, அவளைவிட்டு உங்களைப் பிரியச்செய்து அவளைக்கவர்ந்த) பகைவ(னான இராவண)னை அழித்தற் பொருட்டு வேறொருவனை (சுக்கிரீவனை)த் துணையாகக்கொண்டா யென்றால், (அது,) சிங்கத்தைவிட்டு முயலைப்பற்றுவது (போலாம்). (இது) என்ன (பைத்தியகார) முயற்சி!"

செயல்—காவல் (பிங்கலந்தை). செற்ற—அழித்த. பகை—பகைவன். செயல்—ஒழுக்கம் (சூடாமணி நிகண்டு). இப்பொருள் கொண்டால், 'செயலைச் செற்ற பகை' என்பது (பிறனில்விழையாமையாகிய) ஒழுக் கத்தை (ச் சீதையைக் கவர்ந்ததனால்) அழித்த என்று பொருள்படும். தெறுவான்—அழிக்கும்படி. தெரிந்து ஆராய்ந்து. அயல்—அந்நியம்; ஆகுபெயராய் அந்நியனை உணர்த்தியது. புயல்—மேகம். பற்றும்— பிடிக்கும். பொங்குதல்—(கோபத்தாற்) கொதித்துக் கிளர்தல். அரி— சிங்கம். அப்பொங்கரி என்பதில் அ பலாறிசுட்டு. பிரசித்தமான என்னும் பொருட்டு. 'பற்றுறும் பொங்கரி' என்பதும் பாடம்.

புயலைப் பற்றும் பொங்கு அரி—(விசைகொண்டு குதித்து மேற் பாயுங்கால் ஆகாயம் அளாவ எழும்பி) மேகத்தைப் பிடிக்கின்ற கோபத் தோடு கூடிய சிங்கம்.

புயல், 'மேகம்போன்றதான யானை' என்பது மூந்திய உரை. அவ்வுரை 'புயல்-உவமையாகுபெயர்; கரிய பெரிய வடிவிலும் மதமழை சொரிதலிலும் பெருமுழக்கத்திலும் உவமை' எனல் காண்க.

சந்திரனுக்கு மறுவுண்டு, சூரியனுக்கு மறுவில்லை யென்பதொழிய மறுவற்ற சூரியகுலத்தை நீ பிறந்து மறுவுற்றதாக்கினை யெனல்.

469 "காரி யன்ற நிறத்த களங்கம்ஓன்
றூரி யன்ற மதிக்குள தாமென்ப:
சூரி யன்மர புக்கும்ஓர் தொல்மறு
ஆரி யன்பிறந் தாக்கினை யாமரோ."

இ-ள். "கருமைபொருந்திய நிறத்தையுடைய களங்கம் ஒன்று சந்திரனுக்குள்ளதென்று சொல்வார் (உலகத்தோர்): (மறுவற்ற சூரியனுக்கும் மறுவுண்டென்று சொல்லும்படி, அச் சூரியனைமூலபுருடனாகவுடைய) சூரியகுலத்துக்கு ஒரு மறுவை (அக்குலத்தில்) நீ பிறந்து உண்டாக்கினை! (இது இரங்கத்தக்கது)."

கார் - கருமை. இயன்ற - பொருந்திய. ஊர் - ஊர்கோள்—பரிவேடம். தொல் - பழமைபான மறு - குற்றம். புதிதாக இராமனால் உண்டான மறுவைத் தொல்மறு (—பழமையான மறு) என்பது முரணையிருத்தற்குச் சமாதானமாகத் 'தொல் மறு - முன்னோனைவரையும் தொடரும் மறு' என்றது மூந்திய உரை. (பழிச்) சொல் (ஆகிய) மறு தொல் மறு என எழுதுவோரால் மாற்றியெழுதப்பட்டதுபோலும். மறு களங்கத்துக்கும் குற்றத்துக்கும் பொதுவாய்ச் சூரியனைக் குறிக்கும்போது களங்கம் என்றும் சூரியகுலத்தைக் குறிக்கும்போது குற்றம் என்றும் பொருள்படக்கூறிய நயம் காண்க. ஆரியன் - தலைவன். ஆம் அரோ அசைகள். 'களங்கநிறத்தொன்மை,' 'உளதாமென' என்பனவும் பாடங்கள்.

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௧௨௯-ம் பக்கத்தொடர்ச்சி].

பகையல்லாதவனை மறைந்துநின்று கொன்ற நீ
வீரரேறுபோல வெட்கமின்றி நிற்கின்றாயே! எனல்.

470 "மற்றொ ருத்தன் வலிந்தறை கூவ வந்
துற்ற என்னை ஒளித்துயி ருண்டநீ
இற்றை யிற்பிறர்க் கும்இகல் ஏறென
நிற்றி போலும் கிடந்த நிலத்தரோ!"

இ-ள். "சுக்கிரீவன் வலியப் போர்செய்தற் கழைத்ததனால் வந்து சேர்ந்த என்னை (வஞ்சமாக) மறைந்து (நின்று அம்புவிட்டுக்) கொன்ற நீ (இந்த அதம அதர்மகாரியத்தைச் செய்த) இன்றைத்தினத்திலேயே (உன் அநியாயச்செயலாற் கொல்லுண்டு யான்) கிடக்கின்ற (இந்த) இடத்திலேயே பிற (வீர) ரெல்லாருக்கும் வலிய ஆண்சிங்கம்போல வெட்கமின்றி (இறுமாந்து) நிற்கின்றாயே!"

அறைகூவல் - போர்செய்தற் கழைத்தல். இற்றை - இன்றைத் தினம். இகல் - வலி. ஏறு, சிங்கம் முதலிய மிருகங்களின் ஆண்; இங்கே அவற்றுட் சிறந்த ஆண்சிங்கத்தைக் குறித்தது. நிற்றி - நிற்கின்றாய். போலும் ஒப்பில் போலி. அரோ - ஈற்றசை.

வாலியை அழித்தாயல்லை,
தருமவேலியை அழித்தா யெனல்.

471 "நூலி யற்கையும் நும்குலத் துந்தையர்
போலி யற்கையும் சீலமும் போற்றலை,
வாலி யைப்படுத் தாயலை, மன்அற
வேலி யைப்படுத் தாய்விறல் வீரனே."

இ-ள். "(மறைந்து நின்று என்னைக்கொன்றதனால் தரும் சாஸ்திர முறையையும் உங்கள்குலத்து முன்னோர் (அநுசரித்த) முறையையும் (அவர்கள்) நல்லொழுக்கத்தையும் பாதுகாத்தவ னல்லாதவனாயினாய். வாலியைத்தொலைத்தாயல்லை! தருமவேலியைத் தொலைத்தாய்!"

இயற்கை—முறைமை. நும்—உங்களுடைய. உந்தை—உன் தந்தை. உந்தையர்—உங்கள்முன்னோர். இராமனையும் அவன் தம்பியரையும் உளப்படுத்தி நும் குலத்து உந்தைய ரென்றான். 'வாலியை' யென்றது 'என்னை' யென்றபடி. வலி தன்மைப்படர்க்கை. இவ்வாறு தன்னைப் பிறன்போலக் கூறியதனால் ஒருவகை நயம் அமைதல் கவனிக்கத்தக்கது. விறல்—வெற்றி; வலி.

உன் செயல், தோற்றத்திற் குரங்கினைக் கொன்றதாய், உண்மையில், அறந்தனை அழித்ததாயுள்ளது என்பது குறிப்பு.

உண்மையாக வாலியைக் கொன்றிருக்கவும், வாலியைக் கொன்றாயல்லையென முரண்படக்கூறி, அதிசய முண்டாக்கிப் பின்பு, அக்கொலை சிறிது, அதனால் விளையும் பயன் பெரிது, அப்பயன் இன்றளவும் அழியாது நிலையாயிருந்த தருமவேலியை அழித்ததாயுள்ளதென்று கூறிய சாதுரியம் பாராட்டற்பாலது. அரசன் அக்கிரமஞ்செய்தால், அவனைப் பிறர் பலர் பின்பற்றுவர்: அதனால் தருமம் அழிந்துவிடுமென்பது கருத்து.

பயிர் குடியாக, ராஜநீதி வேலியாக, பயிரைக்காக்கும் காவற்காரன் குடியைக்காக்கும் அரசனாக,—வேலி அழிக்கப்பட்டால் மிருகங்கள் மேய்தலுக் குள்ளாகிப் பயிர் அழிந்துவிடல்போல, நீதி அழிக்கப் பட்டால் தீயோர்கொடுமைக்குள்ளாகிக் குடி அழிந்துவிடுமென்றும், காவற்காரனே வேலியை அழித்தாற்போல அரசனே நீதியை அழித்தால், அது போன்ற விபரீதவினை வேறு யாதுளது! என்றும் விரித்துக் கூறுதற்குரிய கருத்தைச் சுருக்கமான சொற்களால் எளிது விளங்க இனிது கூறியிருக்கும் நயம் கூர்ந்து நோக்குதற்குரியது.

மனைவியைக் காவாத வில்லைவைத்திருந்தது,
ஆயுதமில்லாதவன்மார்பில் அம்புவிடவோ? என் றிகழ்தல்.

472 "தாரம் மற்றொரு வன்கொளத் தன்கையில்
பார வெஞ்சிலை வீரம் பரிப்பதென்!
நேரும் அன்று மறைந்து நிராயுதன்
மார்பின் எய்யவோ, வில் இகல் வல்லதே!"

இ-ள். "(நீ கொண்ட) மனையாளை மற்றொருவன் (கவர்ந்து) கொள்ள (வொட்டாமல் தடுத்து அவனைக்கொன்று அவளைக் காக்கப் பயன்படாமல் வீண்) பாரமும் கொடுமையுமாயுள்ள வில்லை வீரத் (தோற்றத்) தோடு தாங்கியிருப்பது எதற்காகவோ? (உனக்கு ஒரு தீங் கும் செய்யாதிருப்பதேயன்றி) ஓராயுதமுமில்லாதிருப்பவன்மார்பிலே (வீரர்போல நேரில் நின்று எய்தலே நீதியற்றதாயிருக்க) நேராக அல்லா மல், (பேடிகள்போல வஞ்சகமாக,) மறைவாக (நின்று) எய்தற்கோ (நீ) விற்போர்வன்மையுடைத்தாயிருப்பது!"

தாரம் - மனைவி. பரித்தல் - தாங்குதல். இகல் - போர். தாரம் சிலை இரண்டாம்வேற்றுமைத்தொகை. வீரம் மூன்றும்வேற்றுமைத் தொகை. 'வீரம் பழிப்பதே' என்பதும் பாடம்.

வாலி இராமனை நோக்கி, "பாரியைப்பறிகொடாது பாதுகாத்தற் குப் பயன்படுத்தப்படாத பாரவில்லை, வீரர்போல, ஏன் இறுமாப்போடு ஏந்தியிருக்கிறாயென்றெண்ணினேன்; எண்ணித் தெளிந்ததுயாதெனில், அவ்வில்லைத் தொழிற்படுத்தாது சும்மாவைத்திருத்த லாகாதென்று நிராயுதனை மறைந்து கொல்லுதற் குபயோகித்துச் செய்யக்கடவதைச் செய்யாதுவிட்டதேயன்றிச் செய்யாதொழியக்கடவதைச்செய்து விதி விலக் கிரண்டையுமே மீறினாயென்பது" என்றானென்க.

இராமன் தன்னை மறைந்தெய்ததற்காக, வாலி மனமெரிந்து வருந்திக் கூறிய 'திகைத்தனைபோலும் செய்கை' யென்றற்றொடக்கத்த

ஏச்சுப்பேச்சின் இறுதியாக அதன் மகுடமென்னும்படி இப்போது கூறியதினும் அதிகபலமாக ரோசமுண்டாகும்படி இழித்து எளனஞ் செய்தல் இயலாததாயிருத்தல் நோக்கத்தக்கது.

வாலிக்கு ராமன் மறுமொழி பகருதல்.

["உன் குலப்பகைஞனை மாயாவியைக்கொல்லப் பாதாளத்துள்ளே போன நீ, நெடுங்காலம் திரும்பாமையால், இறந்தாயென்று உன்குலப் பெரியோர் உன் தம்பியை 'அரசாள்க' என, இசையானுய், 'மன்னனை மாய்த்தவனை மாய்ப்பேன், மாய்க்கொணுதெனில் மாள்வேனேயன்றி ஆளேன்' என, அப்பெரியோர் அரசை வற்புறுத்திக் கொடுத்ததுண்டு, அவன் (மனசொடு) கொண்டதில்லை. நீ திரும்பிவந்தபோது, விரும்பி வரவேற்று, வணங்கி 'உன் அரசை ஒப்புக்கொள்' என்றனன். அவன் தம்பியென்ற அன்பு சற்றும் இல்லாயாய் அவன் குற்றமற்றவனென் றறிந்தும், கொல்லப்புகுந்தாய். அஞ்சி அபயமென்றும் அருளினு யில்லை. தோற்றனனென்று தொழுதும் கூற்றுவன்போலக் கொல்வது குறித்தாய். உயிர்தப்ப ஓடியவனை உய்யவிடாது தொடர்ந்தாய். இப் போது அவன் உயிரோடிருப்பது, 'இந்த மலைக்கு வாலி வந்தால் இறந் திடுக' என மதங்கமுனி சபித்த சாபத்தடையுடைய மலையை அடைந் திருப்பதனுலன்றி நீ மனமாரக் கொல்லாமல் விட்டிருத்தலாலன்று."]

ஏதிலானில்லாளைக் கவர்வானுக்கு
எவ்வகைப்பெருமையும் இல்லையெனல்:

473 "ஈர மாவதும் இற்பிறப் பாவதும்
வீர மாவதும் கல்வியின் மெய்ந்நெறி
வார மாவதும் மற்றொருவன்புணர்
தார மாவதைத் தாங்கும் தருக்கதோ?"

இ-ள். "(கொல்ல முடியாத தம்பியைக் கொல்லாதிருந்தாயே யன்றிக் கவரக்கூடிய அவன் மனைவியைக் கவராது விட்டாயில்லை.) அன் பும் குடிப்பிறப்பும் கல்வியின் (பயனுன) உண்மையொழுக்கத்துக்கு

உரிமையும்](உடையேமென்று களிப்புற்றிருந்தாய்; இவைகளை உடைமை) மற்றொருவன் மணஞ்செய்த மனைவியைப் பிடித்துக்கொள்ளும் அகங்கார (ச்செயலோடு பொருந்து) மோ?"

ஈரம் - அன்பு. இற்பிறப்பு - உயர்குடிப்பிறப்பு. வாரம் - உரிமை. கல்யாணஞ்செய்தலென்னும் பொருளுடைய மணம்புணர்தல், புணர்தலெனச் சுருக்கிக் கூறப்பட்டது. தாங்குதல் - பிடித்துக்கொள்ளுதல் (தமிழகராதி). தருக்கு - அகங்காரம். அது பகுதிப்பொருள்விகுதி. 'தருக்கரோ' என்பதும் பாடம். 'தருக்கதோ' என்ற பாடம் திரிசிரபுரம் வி. கோவிந்தபிள்ளை பதிப்பிற் கண்டது.

'தாங்கும் தருக்கரோ' என்பதற்கு, 'பாதுகாக்கும் பெருமையேயன்றோ' என்பது முந்திய உரை.

போர்வீரர்தருமத்துக்கும் இல்வாழ்வார்தருமத்துக்கும் பொருந்தாதசெயல்கள் செய்தாயாதலால் உன்னைக் கொன்றேனெனல்.

["நாம் வலியேமென்று மெலியாரை வெகுண்டு வேதனைப்படுத்தலால் வீரதருமம் கெட்டுவிடும். பூவையர்கற்பழித்தலாற் பொதுத்தருமமே கெட்டுவிடும். நீ சுக்கிரீவனைத் துன்புறுத்தியும் அவன்மனைவியை வௌவியும் இருதருமங்களையும் ஒருசேரக் கெடுத்தாயாதலாலும் எனக்கு இன்னுயிர்நண்பனான உன்னுடைய தம்பியைக் காத்தல் என்னுடைய கடனாதலாலும் உன்னைக் கொன்றேன்" என்றான் இராமன்.]

இராமனுக்கு வாலி எதிர்மொழி இயம்பல்.

எங்களுக்கேற்பட்டது விவாகச்சேர்க்கையன்று. இயற்கைச்சேர்க்கையே யெனல்.

474 "ஐய, நுங்கள் அரும்குலக் கற்பின்அப்
பொய்யில் மங்கையர்க் கேய்ந்த புணர்ச்சிபோல்
செய்தி லன்எமைத் தேமலர் மேலவன்
எய்தின் எய்திய தாக இயற்றினன்."

இ-ள். "(மனித இனத்தினரான) உங்களுடைய குல (த்துத் தோன்றும்) மாதருக்குப் பொருத்தமான (விவாகஞ்செய்தே ஆடவரைச்) சேர்தல் (என்ற ஏற்பாட்டைப் பிரமதேவன் செய்திருப்பது) போல, (மிருக இனத்தைச் சேர்ந்த வானரரான) எங் (கள் மாதர்) களுக்கு (ஒரு ஏற்பாடும் அந்தப்) பிரமதேவன் செய்யவில்லை. (எங்களுள் எவனேனும் எவளையேனும்) அடை (யும்படி நேர்) ந்தால், (அவ்வடைதல் கல்யாணச் சடங்கில்லாமல் அவன் அவளைக் கலத்தலுக்கு) அடைந்ததாகுமாறு செய்திருக்கிறான்."

ஐய—ஐயனே—தலைவனே. அண்மைவிளி. நுங்கள்—உங்கள். கற்பின்—கற்பினையுடைய. அ பலரறிசுட்டு. பொய்இல்—பொய்ம்மையில்லாத. "பொய்யின்மை—மனம்வேறு சொல்வேறு தொழில்வேறாகாமை, திரிகரணசுத்தி." புணர்ச்சி—(விவாகஞ்செய்து) கலத்தல் (ஆகிய விவாகப்புணர்ச்சி). எமை—எங்களுக்கு; உருபுமயக்கம். தேம் மலர் மேலவன்—வாசனையுடைய (தாமரை) மலர்மேலிருப்பவன்—பிரமன். எய்தல்—அடைதல்.

ஆண் பெண் நெருங்கநேர்ந்தால் பொருந்தநேர்ந்ததாக யாங்கள் சிருட்டிக்கப்பட்டிருக்கிறோம் என்பது கருத்து.

["ஆதலால் என்செயல் இயற்கையானதேயன்றிக் குற்றமாகாதென்று கொள்வாயாக" என்றான் வாலி.]

வாலி கூறிய சமாதானம் போலியாமென
இராமன் ஏதுக்காட்டி விளக்குதல்.

["நீ, உன்தம்பி, அநுமன் முதலியோர், வடிவத்தால் வானரராயினும், தேவர்களது புதல்வராயிருத்தலாலும் அறநெறியை ஐயந்திரிபற அறிந்திருத்தலாலும் மிருகங்களாகீர்; ஆதலால் மிருகச்செயல் உனக்கு அடாததே".]

மிருக உடம்புடையாயாயினும் மனிதஅறிவுடையாயாதலால் நீ செய்த தவறு தவறேயெனல்.

475 "பொறியின் யாக்கையதோ? புலன் நோக்கிய
அறிவின் மேலதன்றோ? அறத் தாறுதான்:
நெறியும் நீர்மையும் நேரி துணர்ந்த நீ
பெறுதியோ? பிழை உற்றுறு பெற்றிதான்."

இ-ள். "அறநெறியானது, (மக்களுக்கும் மிருகங்களுக்கும் பொதுவான) ஐம்பொறிகளையுடைய உடம்பைச் சார்ந்ததோ? (அவ்வைம்பொறி வாயிலாக அடையும்) புலன்களை (ஏற்று ஆராய்ந்து பகுத்து) அறிகின்ற (மக்களுக்கே உரித்தான) அறிவைச் சார்ந்ததன்றோ? (மக்கள்போல அவ் அற) நெறியையும் (அறநெறிப்படி ஒழுகுவார் நற்பயனையும் ஒழுகாதார் தீப்பயனையும் அடையச்செய்தலாகிய அவ் அறநெறியினது) இயல்பையும் செவ்விதாகத் தெரிந்த நீ (மிருகங்களுக் கியல்பான, ஆண் பெண் முறைதவறிச் சேர்தல் போன்ற) பிழையை உற்று (அப்பிழையால் அம்மிருகங்கள் குற்றத்துக்குள்ளாகாமல்) உறும் தன்மையைப் பெறுதற்பாலையோ?"

பொறி புலன்கள் முறையே வடமொழியில் இந்திரியங்கள் விஷயங்கள் எனப்படும். மேல் - இடம். மேலது - இடத்தினது. அறத்து ஆறு - அறநெறி - தருமமார்க்கம் - நல்லொழுக்கம். மூன்றாவதடியில்வரும் நெறி அறநெறியைக்குறித்தது. நீர்மை—இயல்பு—தன்மை. நேர்மை—செவ்வை—நுண்மை. நேரிது (ஆக) செவ்வையாக; நுண்ணிதாக. பெறுதி—பெறுவாய். 'புலனுகிய', 'புலனுக்கிய', 'நெறியினேர்மையை நேர்நின்றுணர்ந்தநீ' என்பனவும் பாடங்கள்.

"நீ, வடிவினால் விலங்காகிய வானரம்போலிருப்பினும், பகுத்தறிவுடைமையால் மனிதர்போலுதலால், தருமமார்க்கத்தை யறிந்திருந்தே தவறுகள்செய்தது தகாது என்பதாம். தொல்காப்பியத்து மரபியலில் 'மக்கள் தாமே ஆறறிவுயிரே — பிறவு முளவே அக்கிளைப் பிறப்பே'

என்ற சூத்திரத்தின் உரையில் 'பிறப்பென்றதனால், குரங்கு முதலாகிய விலங்கினுள் அறிவுடையனவெனப்படும் மனவுணர்வுடையன உளவாயின் அவையும் ஈண்டு ஆறறிவுயிராயடங்கு மென்பது' என்பது இங்குக் காணத்தக்கது."

முதலைபிடிக்க, மூலமே! என்று முறையிட்டு முத்திபெற்ற யானை (யைத்
தெய்வமென்னமல்) மிருகமெனலாமோ வெனல்.

476 "மாடு பற்றி இடங்கர் வலித்திடக்
கோடு பற்றிய கொற்றவற் கூயதோர்
பாடு பெற்ற உணர்வின் பயத்தினல்
வீடு பெற்ற விலங்கும் விலக்கதோ?"

இ-ள். "(தனது தேகத்தில் ஒரு) பக்கத்தை (க்கௌவி) ப் பிடித்து முதலையிழுத்ததனால் (பாஞ்சசன்னிய மென்னும்) சங்கை (இடக்கையினிடத்து) ப் பிடித்த திருமாலை (ஆதிமூலமே! என்று கூவி யழைத்து) ஓலமிட்ட ஒப்பற்ற பெருமைபெற்ற அறிவின் பல (ன் படைத்தமையி)னல் (தன்னைப் பிடித்த முதலைவாயினின்றும்) விடுதலை பெற்ற (கஜேந்திராழ்வா னென்னும் யானையாகிய) மிருகமும் மிருக (மென்று சொல்லப்படு) மோ?"

மாடு — பக்கம். இடங்கர் — முதலை. வலித்தல் — இழுத்தல். கோடு — சங்கு. கொற்றம் — வெற்றி. கொற்றவன் — வெற்றியுடையவன். கூய — கூவிய — ஓலமிட்ட (கந்தபு. மாகாளர். சூ. தமிழ்ச்சொல்லகராதி). ஓர் — ஒப்பற்ற. பாடு — பெருமை. பயம் — பயன் — பலம் — பலன். வீடு — விடுதலை; முத்தி. விலங்கு — மிருகம். அது பகுதிப்பொருள்விகுதி. 'விலக்கரோ' என்பதும் பாடம்.

முதலைவாய்ப்பிடியினின்றும் பிறவிக்கட்டினின்றும் ஒருங்கே விடுதலைபெற்ற என்ற இருபொருள்பட 'வீடுபெற்ற' என இரட்டுறமொழிந்த நயம் நோக்கத்தக்கது.

கஜேந்திராழ்வான்போல நீ உருவத்தால் மிருகமானுலும், உணர்வால் மனுடனாதலால், மிருகச்செயல் (தம்பிமனைவியைச்சேர்தல்) செய்தது தவறென்பது குறிப்பு.

தீமை நன்மை தெரியாமை மிருக இயல்:
நீ அறியாத நீதி யாதுமில்லை யென்பதை
உன் பேச்சு உருபித்த தெனல்.

477 "நன்று தீதென் றியல்தெரி நன்னெறி
இன்றி வாழ்வதன் றோ விலங் கின் இயல்?
நின்ற நன்னெறி நீ அறி யாநெறி
ஒன்றும் இன்மைஉன் வாய்மை உணர்த்துமால்".

இ-ள். "மிருகசுபாவமென்பது, (இச்செயல்) நல்லது (இச்செயல்) தீயதென்று பகுத்தறிகின்ற அறிவில்லாமல் உயிர்வாழ்வதன்றோ? (அதற்கு மாறாக, உலகத்தில் வழங்கா) நின்ற நன்னெறிகளுள்ளே நீ அறியாதது ஒன்றும் இல்லாமையை (நீ இப்போது விவகாரமாகக்கூறிய) உன் வாய்ச்சொற்களே தெரிவித்துவிட்டன. (எல்லா நன்னெறிகளையுந் தெரிந்துவைத்தும் அவைகளுக்கு மாறாக நீ நடந்தது தவறேயென்பது குறிப்பு.")

இயல் — தன்மை — சுபாவம். விலங்கு — மிருகம். வாய்மை — வாக்கு — (திருநெல். வெள்ளையானை. 2. தமிழ்ச்சொல்லகராதி) — வாய்மொழி. ஆல் ஈற்றசை. விலங்கின்னியல் என்பதில் னகர ஒற்று விரித்தல். 'விலங்கின்னிடை' என்பதும் பாடம். இதற்கு 'மிருகங்கட்கு (மனிதரோடு) வேறுபாடு' என்பது மூந்திய உரை.

விதி விலக் கறியாத மனிதர் மிருகங்களே;
விதிப்படி ஒழுகும் மிருகங்கள் தெய்வங்களே யெனல்.

478 "தக்க இன்ன, தகாதன இன்னவென்
றொக்க உன்னல ராயின், உயர்ந்துள
மக்க ளும்விலங் கே, மனு வின்நெறி
புக்க வேல், அவ் விலங்கும்புத் தேளிரே."

இ-ள். மனிதர்களும், இன்னவை தகுதியானவை, இன்னவை தகாதவை யென்று பகுத்தறியாரானால், மிருகங் (களுக் கொப்பானவர்)

களே. மிருகங்களும், சன்மார்க்கத்திற் பிரவேசித்தவைகளானல், தெய்வங் (களுக்கொப்பானவை) களே.

தக்க, புக்க — அன்சாரியை பெறாத தக்கன புக்கன; இறந்தகால வினையாலணையும்பெயர்கள். இன்ன — இவை. ஒக்க — பொருந்த. உன்னல் — நினைதல். விலங்கு — மிருகம். புத்தேள் — தெய்வம். 'உன்னலாகி' யும் பாடம்.

விலங்கும் மனிதரே என்பது இயல்பான முடிவு. அதுவே உயர்வுகுறித்தற்குப் போதியதாயிருக்கவும், 'விலங்கும் மனிதரே' என்னது 'விலங்கும் புத்தேளிரே' என நனி உயர்த்திக்கூறி நன்னெறிச் சிறப்பை நயம்பட வற்புறுத்திய கவிசாதுரியம் பாராட்டற்பாலது.

"மநு வடசொல்; இது இங்கே அவனுற் செய்யப்பட்ட தரும சாஸ்திரத்தைக் குறித்தலால், கருத்தாவாகுபெயர். மனுவின்னெறி னகாமெய் விரித்தல். எல் — எனில்; மரூஉ. புத்தேளிர் இர் பலர் பால்விகுதி; கேளிர், மகளிர் என்ற இடங்களிற் போல."

புண்ணியஞ்செய்து, புண்ணியபலனையடைந்ததுபோலப்
பாவஞ்செய்து, பாவபலனையடைந்தாயெனல்.

["நன்னெறியில் நின்று சிவபூசை செய்த புண்ணியபலனுக நாற்பெரும் பூதங்களின் வலிமையையும் ஒருசேர நண்ணினாய் தீநெறியிற் புகுந்து தம்பியைக் கொல்ல முயன்று அவன்மனைவியைக் கவர்ந்து இல்லறமாண்பைக் கெடுத்த பாவபலனுக என் அம்புக் கிரையானாய்" என்றான் இராமன்.]

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

உ

பெரியநாட்டுமடம் சாசனம்.

தொண்டைமண்டலம் முற்காலத்தில் இருபத்துநான்கு கோட்டங்களாகவும் எழுபத்தொன்பது நாடுகளாகவும் பிரிக்கப்பட்டுளது என்பது சரித்திர ஆராய்ச்சியுடையார் யாவரும் அறிந்த விஷயம். காலஞ்சென்ற கனகசபைப்பிள்ளையவர்கள் தம்முடைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகேட்குமுந்திய தமிழர் என்ற நூலிலே தொண்டைமண்டலத்தைப் பற்றிக் கூறும்போது அது இருபத்துநான்கு கோட்டங்களையுடையதாயினும், தொண்டைமண்டலப் பட்டயம் என்பதில் எழுபத்தேழு நாடுகளே காணப்படுகின்றன[1] வெனக் குறித்துள்ளார்கள். அவர்கள் குறித்த தொண்டைமண்டலப் பட்டையம் இதுவென இதுபொழுது அறிதற்கில்லை. எனினும் திருவண்ணாமலையிலே பெரியநாட்டுமடம் என்று ஒரு மடம் இருக்கிறது. அதற்கேற்பட்ட தாமிரப்பட்டயத்திலே இந்நாடுகளும் கோட்டங்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. அப்பட்டயத்தில் எழுபத்தொன்பது நாட்டிற்குப் பதிலாக எண்பத்தைந்து நாடுகள் காணப்படுகின்றன. இப்பட்டயம் வெட்டப்பட்ட காலம் சகம் ருசாகூ ௰௫-க்கு ஆங்கிலவாண்டு 1513 ஆகும். பட்டயத்தைக் கீழே குறிக்கின்றேன்.

பெரியநாட்டுக்கு விநாயகர் அழியாவிரதம்பூண்ட விநாயகர், அப்ப[2] தம்பிரான், அழியாவிரதம்கொண்ட தம்பிரான் இவர்கள் மூணுபேருடைய திருவுளம் உண்டாவதாகவும்.

ஸ்வஸ்திஸ்ரீமன் பிரிதுவிராச்சியம் கலியுகம் ஆதிப்பிரவேச தாம்பிரசாசனம். சங்கீதம் மனுவிக்கியான சமான சமன்விதம். ஆசந்திரார்க்க மகோரவாக்யம் பஞ்ச; சதுர்விம்சதி கோஷ்டம் யேவம் அருணாசல ஸ்தலம். ஆரம்பே சாம்ராஜ்பம் ஆதிசம்பவம்[3].

---

[1] The Tamil 1800 years ago p. 66. [2] அப்பொழுது என்று வாசிக்க. [3] இது சுலோகமாக இருந்தாலும் பொருள் விளங்காதபடி மிகவும் பிழைபட்டிருக்கிறது.

ஸ்வஸ்திஶ்ரீமன் மகாமண்டலேசுவரன் மேதினி ஈசுரன் அரியராயவிபாடன் பாஷைக்குத்தப்புவார்கண்டன் கண்டநாடுகொண்டு கொண்டநாடு கொடாதான் துலுக்கதளவிபாடன் துலுக்கமோகன மதமவித்தோன் எம்மண்டலமும் கொண்டு ஈழமும் திறைகொண்ட ராசாதிராசபரமேசுரன் துரங்காதிபதி மன்னிய[1] சுலுத்தான் நாவலம் பெருந்தீவு நவமணிவேந்தன் நவகோடிநாராயணன் பூலோகபயங்கரன் மேமந்? திறைகொண்ட விருதுநாராயணன் சதுஸ்சமுத்திராதிபதி பூர்வ தட்சின பச்சிம உத்தர கெசவேட்டை கண்டருளி ஶ்ரீவீரப்பிரதாப கிருஷ்ண மகாதேவராயர் பிருதுவிராச்சியம் பண்ணியருளாநின்ற சாலிவாகனசகாப்தம் ௲சாஙரு க்கு மேல் செல்லாநின்ற ஆங்கிரசஸம்வத்ஸரத்தில் மகரகுருவாரத்தில் பூர்வபட்சத்துப்பஞ்சமியும் சுபநாமயோகமும் பாலுவாகரணமும் உத்திராடநட்சத்திரமும் பெற்ற பிற்றைநாள் (1) [2] புழற்கோட்டம், நாயிறுநாடு, அம்பத்தூர்நாடு,[3] ஆகுடிநாடு, ஆத்தூர்நாடு, கண்ணியநாடு,[3] எழூமூர்நாடு; (2) புலியூர்க்கோட்டம், குன்றத்தூர்நாடு, போரூர்நாடு, மாங்காடுநாடு, அமரூர்நாடு, கோட்டூர்நாடு; (3) ஈக்காட்டுக்கோட்டம்[4] காக்கனூர், கச்சிநாடு; (4) மணவூர்க்கோட்டம், பாசாலிநாடு, இலத்தூர்நாடு,[5] கொண்ணூர்நாடு, புரிசைநாடு, பெருமூர்நாடு; (5) செங்காட்டுக்கோட்டம்[6], பேன்னலூர்நாடு, அதிகத்தூர்நாடு; (6) பையூர்க்கோட்டம், வீரபத்திரநாடு, செண்ணூர்[7] நாடு, வணகலி[8] நாடு, தண்ணூர்நாடு; (7) எயிற்கோட்டம், தண்டகநாடு, மாகறல்நாடு[9] கோனேரிநாடு; (8) தாமற்கோட்டம், கரிவீடுநாடு,[10] வடகரை வல்லநாடு; [11] (9) ஊற்றுக்காட்டுக்கோட்டம், பாலையூர்நாடு, தாமனூர்நாடு, குண்ணநாடு,[12] திடுவணூர்நாடு; [13] (10) களத்தூர்(க்)கோட்டம், குருமாநாடு, வல்லியூர்நாடு,

---

[1]மன்னே. [2]நகவளேவிற்குள் உள்ள எண் கோட்டங்களின் மொத்தத்தையறியக்குறிக்கப்பட்டது. [3]இவை கனகசபைப்பிள்ளை புத்தகத்திற் காணப்படவில்லை. [4]மணவிற்கோட்டம் என்று கல்வெட்டுக்களிற் காணப்படுகிறது. [5]கான்றூர்நாடு என்று 1910-ம் ஆண்டு 232 நிர். கல்வெட்டிற் காணப்படுகிறது. [6]இரண்டாயிரவேலிப்பற்று என்றுஞ் சொல்லப்படும்; 1910-ம் ஆண்டு. நிர். 256. [7]சேவூர் என்பர் வி. க. [8]வெங்கல்நாடு. [9]மாகறல்நாடு காலியூர்க்கோட்டமாகநினைக்கப்பட்டகாலமுமுண்டு; 1908ம் ஆண்டு நிம்பர் 56. [10]கரிவேடு, என்று பி-ம். இதனையே தாமல்நாடு என்றும் வழங்கினர். 1915-ம் ஆண்டு 204 நிர். [11]வடகரை என்ற அடையின்றி வல்லநாடென்றே வழங்கப்பட்டது. [12]குன்றநாடு. பி-ம். 1909-ம்ஆண்டு நிர். 284. [13]நீர்வேளூர்நாடு. வி.க.

பாதூர்நாடு, நடுநாடு; (11) செம்பூர்(க்)கோட்டம், பிறையூர்நாடு, பட்டணநாடு, முகுந்தூர்நாடு; (12) ஆமூர்க்கோட்டம், மீகுமிழிநாடு,[1] பழவூர்நாடு; (13) ஈத்தூர்(க்)கோட்டம், அரமரக்கநாடு; (14) வெண்குன்றநாடு, பெருநகர்நாடு, அரசூர்நாடு, மருதாடுநாடு, நல்லூர்நாடு, தெள்ளாறுநாடு; (15) பலகுன்ற(க்)கோட்டம், பாராஞ்சிரநாடு,[2] தச்சூர்நாடு, மெயூர்நாடு, சிங்கம்பொருதவளநாடு, பெருந்தமிழிநாடு;[3] (16) இளங்காட்டு(க்)கோட்டம், பொன்னூர்நாடு, தென்னாத்தூர்நாடு; மாகுன்னநாடு;(17) காவியூர்(க்)கோட்டம், காழியூர்நாடு[4] திருப்பூவைநாடு[5], விற்பேடுநாடு, எரிகிதாநாடு[6], பாவூர்நாடு; (18) சிறுகாரைக்கோட்டம், ஆய்ந்தநாடு[7]; (19) படுவூர்(க்)கோட்டம் பெருமதநாடு,[8] ஆற்காடுநாடு, செங்குன்றநாடு: (20) கடிகை(க்)கோட்டம், பெருங்காஞ்சிநாடு, மேல்களத்தூர்நாடு, பாராஞ்சிநாடு, (21) செந்திரிகை(க்)கோட்டம், பேரையூர்நாடு,[9] வற்குளநாடு, ஆலத்தூர்நாடு, அருங்குள நாடு; (22) குன்றபத்திரக்கோட்டம், மாங்களநாடு, கிண்ணைநாடு, வெங்களூர்நாடு; (23) வேங்கிடக்கோட்டம், குடகரைநாடு, தொண்டைமானாடு, பொத்தப்பிநாடு; (24) வேலூர்(க்)கோட்டம் ஒழுகரைநாடு, வானூர்நாடு[8] சோழவல்லிநாடு[8], விலாடபுரநாடு,[8] செம்புரிநாடு,[8] நென்மலிநாடு,[10] மாத்தூர்நாடு ஆகக்கோட்டம் உயச, நாடு எயகூ நத்தம் கூகூா; இந்த இருபத்துநாலு கோட்டத்தாரும் எழுபத்தொன்பதுவளநாடு அவர்களும் அருணாசலத்தின் அணைவரின் சம்மதியாகக்கூடியிருந்து இந்தப் பெரியநாட்டுமடத்தில் எழுந்தருளியிருக்கப்பட்ட அழியாவிரதம்பூண்ட தம்பிரான் அவர்களும் நாங்கள் பெரியநாட்டவர்கள் தாமிரசாசனபட்டயம் கொடுத்தபடி:—இந்தப் பெரியநாட்டுமடம் கரிகாலசோழராசா முதல் இற்றைவரைக்கும் நடந்துவருகையில் அப்போ(து) கிருஷ்ணராயரும் சாளுவநாயகரும் அருணாசலத்தில் ஆயிரக்கால்மண்டபம் முதற்பிரகாரத்திலே கட்டவேணுமென்று அழியா

[1]குமிழிநாடு. கல்வெ. [2]பாசூர். வி. க; கல்வெ. [3]இது படுவூர்க்கோட்டத்தில் காணப்படுகிறது. வி. க. [4]கழுமலநாடு பி-ம். [5]திருப்பூழிவனம். வி. க. [6]எரிகில்நாடு. பி-ம். [7]கரைவழி ஆய்ந்த நாடு பி-ம். [8]இவை காணப்படவில்லை. வி. க. [9]பொலையூர் வி. க. [10]மாத்தூர்நாடு என்றொன்று காணப்படுகிறது. வி.க.

விரதம்கொண்ட தம்பிரானவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். கேட்கு மிடத்தில் அடியேனாலே உத்திரவுபண்ணக்கூடாது; முன் கரிகால சோழராசா முதல் இற்றைவரைக்கும் நடந்துவருகிற தருமமென்று இந்த வர்த்தமானம் எல்லாம் இருபத்துநாலு கோட்டத்துக்கும் எழுபத்தொன்பது வளநாட்டார்களுக்கும் விசயநகரத்திலே அம்பி அறம்வளர்த்தமுதலியாரவர்களுக்கும் திருமுகம் அனுப்பிவைச்சுது; அதே திருமுகம் பார்த்துக்கொண்டு இருபத்துநாலுகோட்டத்தாரும் எழுபத்தொன்பது வளநாட்டாரும் அம்பி அறம்வளர்த்தமுதலியா ரவர்களும் அருணாசலத்திலே வந்து இவ்விடத்தே நடந்த வர்த்த மானமெல்லாம்கேட்டு உள்பட்டுக்கொண்டு இருந்தார்கள்.[1] கிருஷ்ண ராயரும் சாளுவநாயகரும் காஞ்சித் தலத்திலே ஆயிரக்கால் மண்டபம் தங்களுடைய புண்ணியவசமாகக்கட்டிமுடி(யு)கிறதே. அப்படியே அருணாசலத்திலேயும் ஆயிரக்கால்மண்டபம் கட்டவேணு மென்று கேட்டார்கள். நல்லது; கரிகாலசோழமகாராசா நாள்முதல் இற்றைவரைக்கும் நடந்துவருகிறதர்மமென்று சொன்னார்கள். நல்லது என்று உள்பட்டுக்கொண்டு அந்த மடம் கிழக்குமேற்கு அடி உாஎயிடு, தெற்குவடக்கு அடி உாசுயிடு இதுக்குக்கிரயம் பொன் றூ?[2] இந்தப் பொன் ஐந்நூறும் வாங்கி அழியாவிரதம்கொண்ட தம்பிரானவர்களும் அம்பி அறம்வளர்த்த முதலியார் அவர்கள் (உம்) இந்த ஐந்நூறுபொன் னும் உண்ணாமலையம்மன் திருக்கோவிலுக்கு பொன்தகடு விமானத்துக் குப் போட்டுவைச்சார்கள். அருணாசலேசுரன் சன்னிதி பெரிய கோபுரத்துக்கு [க்] தென்கிழக்கு. ஆக பெரிய நாட்டுமடத்துக்கு விநாயகபூசை பண்ணுகையில் கிருஷ்ணராயரும் சாளுவநாயகரும் அழியாவிரதம் கொண்ட தம்பிரான் அவர்களும் அம்பி அறம் வளர்த்த முதலியார் அவர்களும் இருபத்துநாலுகோட்டத்தாரும் எழுபத்தொன் பது வளநாட்டாரும் என்சம்மதியாக விருந்து மடம்கட்டிவைச்சு இந்த

---

[1] சம்மதிக்காமலிருந்தார்களென்று காணகிறது. [2] 'கொடுக்கிறோமென்று சொன்னார்கள்' என்பது விடுபட்டிருக்கவேண்டும் இங்கே வாசகம் ஒட்டவில்லை.

மடத்தில் அழியாவிரதம்கொண்ட விநாயகரையும் அப் (ப) (பொழுது) தம்பிரானுரையும் இரண்டுபேரையும் எழுந்தருளப் பண்ணிவைச்சு அவர்களுக்கும் திருமஞ்சனம், திருமாலை, திருமேற்பூச்சு, திருப்பரி வட்டம், திருநீறு, நிவேத்தியம் இதுமுதலான அருணுசலஈசுவரன் உண்ணுமலையம்மன் இவர்களுக்கு ஒருகாலம் அழியாவிரதம்கொண்ட சந்தி அபிஷேகம் நிவேத்தியம் தீபாராதனைக்கு மேலைப்பாலையூர்கிராமம் சர்வமானியமாக விட்டது பொன் சா. இந்தப்பொன் நானூறும் வாங் கிக் கட்டளை நடப்பிச்சுக்கொண்டு வருகையில் அழியாவிரதம்கொண்ட தம்பிரானவர்கள் நம்முடைய குமாஸ்தா மாயேச்சுர நினைக்கமுத்தி ஓது வாரை நம்முடைய பெரியநாட்டுமடத்துக்கு நிருவாகம் உள்ள(ள)வும்,[1] சுவாமி சன்னிதியிலே நாலாஞ்சாதி வெள்ளாழருக்குக் கரிகாலசோழ மகாராசாநாள்முதல் இற்றைவரைக்கும் நடந்துவருகிற' து) மடாதிபத் தியம், அனுக்கிரகம், ஸ்ரீமுத்திரைமோதிரம், சுவாமிசன்னிதியிலே நடந்துவருகிற மரியாதையும் முந்தினவிபூதி, முந்தினசந்தனம், முந் தின பிரசாதம், முந்தினவெகுமானம், முந்தினதாம்பூலம் அழியாவிரதங் கொண்ட தம்பிரானவர்களு(க்கு)ம் அம்பி அறம்வளர்த்தமுதலியாரவர் களு(க்கு)ம் இருபத்துநாலு கோட்டத்தாரும் எழுபத்தொன்பது வள நாட்டாரும் ஆயிரத்துத்தொளாயிரம் நத்தத்தாரும் என் சம்மதியாகக் கூடி கிருஷ்ணராயர் சமுகத்திலே தாம்பிரசாஸனபட்டயம் எழுதிக் கொடுத்து கர்த்தனை நினைக்கமுத்தி ஓதுவாருக்கு அம்பி அறம் வளர்த்தமுதலியார் அவர்களும் பெரியநாட்டவர்களும் திட்டம்பண்ணி னது. காஞ்சிபுரதலத்திலே திட்டம்பண்ணினபடிக்கு அருணுசலத்தி லே மயேச்சுரநினைக்கமுத்தி ஓதுவார் அவர்களுக்கு நாங்கள் பெரியநாட் டவர்கள் அனைவர்களும் என்[2] சம்மதியாக நாங்கள் கட்டளையிட்டது தலைக்கட்டுக்கு ஏழுபணம், கல்யாணத்துக்கு மாப்பிள்ளைவீட்டுக்கு மூனுபணம்; பெண்வீட்டுக்கு மூனுபணம்; அமுதுபடி கரிகாய் முத லானது, சந்தன தாம்பூல வஸ்திரம் இதுமுதலானது எல்லாம் இரட்

[1] செய்யும்படி; என்று கூட்டி வாசிக்க. [2] தம்?

டைப்படியாகத் தாம் வருஷாவருஷத்தோறும் அனுபவித்துக்கொள்ளுவீர்களாக. இந்த பெரியநாட்டுமடத்தில் தாம் பிச்சைமுஷ்டியிட்டுக் கொண்டு வந்த பரதேசிகளுக்கு அன்னம்கொடுத்துக்கொண்டு இந்தப் படிக்குத் தாம் நடப்பித்துக்கொள்ளக் கடவீராகவும். பெரியநாட்டு மடத்து தர்மத்துக்கு நாங்கள் பெரியநாட்டவர்கள் கொடுத்த தாமிர சாதனம். தமக்கு பாரம்பரிய சந்தான பாரம்பரியம் சந்திராதித்தவரையும் இந்தப்படிக்கு நாங்கள் பெரியநாட்டவர்கள் நடக்கக்கடவோமாகவும். இந்தப் பெரியநாட்டுமடத்துத் தர்மத்துக்கும் தாமிரசாசனத்துக்கும் யாதாமொருவர் அகிதம் பண்ணினார்களோ அவர்கள் காசி, காஞ்சி, ராமேசுரம், பிரயாகை, குருக்ஷேத்திரம், கேதாரம், நீலகண்டம், இந்த ஏழு ஸ்தலத்திலேயும் கோகத்தி, பிருமகத்தி, சிசுவத்தி, குருவத்தி, மாதிரு, பிதுரு, சிசுவர்க்கம் கொன்றதோஷத்திலே போகக்கடவீராகவும். இந்தப் படி சம்மதிச்சு நாங்கள் பெரியநாட்டு அவர்கள் அனைவர்களும் பெரிய நாட்டு தர்மத்துக்கு தாமிரசாதனபட்டயம் கொடுத்தோம். திருவண்ணமலை பெரிய நாட்டுமடத்துக்கு கர்த்தரான நினைக்க முத்தி ஓதுவார்க்கு இருபத்துநாலு கோட்டத்தாரும் எழுபத்தொன்பது வளநாட்டாரும் ஆயிரத்துதொளாயிரம் நத்தத்தாரும் நாம் இனி இருபத்துநாலு கோஷ்டத்தார் எழுபத்தொன்பதுநாட்டார் ருகூா நத்தத்தாரோம் இவர்கள் கையெழுத்து.

சோமசுந்தர தேசிகன்.